# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 02 சனிக்கிழமை (16-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:202


# தேசிய அரசு அமைக்கும் எண்ணம் ஏதும் கிடையாது

## ஜனாதிபதி சந்திரிகா திட்டவட்டமாக அறிவிப்பு



கொழும்பு,ஜூன்16

**"தேசிய அரசு அமைக்கும் எண்ணம் ஏதும் எமக்கு இல்லை. இது தொடர்பாக எந்தவொரு தரப்பினருடனும் பேச்சுகளோ, கலந்துரையாடல்களோ நடத்தப்படவில்லை."**

**- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தேசிய அரசு அமைப்பது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களுக்கிடையிலோ அல்லது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்களுக்கிடையிலோ இதுவரை கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் புறப்பட்டது

காலநிலை சீரின்மை காரணமாக கடந்த செவ்வாய் முதல் காங்கேசன் துறையில் தரித்து நின்ற'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்று 380 பயணிகளை ஏற்றிக் கொண்டு திரு மலை நோக்கிப் புறப்பட்டது.

## வவுனியாவில் கிரனேட் வீச்சு!

கொழும்பு,ஜூன்16

வவுனியா நகரில் இருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கணேசபுரம் என்னும் இடத்தில் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் சைக்கிளில் வந்த இருவரை ரோந்து சென்ற படையினர் மறித்தபோது அவர்கள் நிற்காமல் இரு கிரனேட்டுக்களை படையினர் மீது எறிந்துவிட்டுத் தப்பிச் சென்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இச்சம்பவத்தில் படையினருக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவைப் பகுதியில் மோதலில் 3 படையினர் பலி

கொழும்பு,ஜூன்16

பொலன்னறுவை மாவட்டத்தில் அறகலன்விலவுக்கு தென்கிழக்கே நிதன்வெல கிராமத்தில் அமைந்துள்ள படையினரின் நிலை மீது நேற்று அதிகாலை 6 மணிக்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்; இரு படையினர் காயமடைந்தனர்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் இத்தகவலை வெளியிட்டது.

இரவுக் காவலில் ஈடுபட்டிருந்த படையணி ஒன்று சுமார் இருபது பேரைக் கொண்ட புலிகளின் அணி ஒன்றைக் கண்டு சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு அந்த அணி மீது தாக்குதல் நடத்தியதாகவும் -

புலிகள் இலகு ரக மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவை மூலம் பதில் தாக்குதல் நடத்திவிட்டுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை காளி கோயிலின் அருகே காவலரண் மீது நேற்றிரவு தாக்குதல்

திருகோணமலை,ஜூன்16

திருகோணமலை நகரில் காளி கோயிலுக்கு அருகில் கடற்படைத் தள வீதியில் அமைந்திருந்த பொலீஸ் காவலரண் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கிரனேட் வீச்சு இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது - காவலரணுக்கு அருகில் வியாபாரம் செய்து வரும் பெரும்பான்மை இனதவர் ஒருவர், முன்னால் உள்ள கடையில் தேநீர் அருந்திவிட்டு வந்து கொண்டிருந்த சமயம் - இடையில் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

பிஸ்ரல் குழு உறுப்பினர் ஒருவர் காவலரணில் நின்ற பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் கைக்குண்டை வீசியதாகத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கசப்புணர்வை நீக்குவதற்காக ஹக்கீமை ஜனாதிபதி சந்திரிகா அழைத்துப் பேச்சு

### கல்முனை நகரசபை மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது

கொழும்பு,ஜூன்16

கசப்புணர்வு காரணமாக எந்நேரமும் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசினார்.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில்கூட பங்குபற்றாமல் - ஜனாதிபதியைச் சந்திக்காமல் - தவிர்த்து வந்த ஹக்கீம், நேற்று மாலை ஜனாதிபதியைச் சந்தித்தது அரசியல் வட்டாரங்களில் மிக முக்கிய விடயமாகப் பேசப்படுகின்றது.

ஹக்கீமின் ஆதரவுடன் அரசைக் கவிழ்ப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி திட்டம் தீட்டி வருகையில், ஹக்கீமைத் தனது அணிக்குள் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியாக ஜனாதிபதி அவருடன் விரிவாக உரையாடியதாகக் கூறப்படுகின்றது.

"பேச்சுக்கள் சுமுகமாக நடந்தன. ஆனால் நான் ஜனாதிபதிக்கு எந்த வாக்குறுதியையும் அளிக்கவில்லை" - என்று ஹக்கீம் பின்னர் தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியதாக அறியவந்தது.

இதற்கிடையில் -

தாம் வாக்குறுதி அளித்தபடி கல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர்கள் வேலைநிறுத்தம் நேற்றுடன் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்16

வடக்குக் கிழக்கில் பணிபுரியும் அப்பிரதேச டாக்டர்களுக்கு கொடுப்பனவை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவித்து வடகக்குக் கிழக்கு மாகாண டாக்டர்கள் கடந்த 5 நாள்களாக மேற்கொண்டிருந்த வேலைநிறுத்தம் நேற்று மாலை 4 மணிமுதல் இடைநிறுத்தப்பட்டது.

சுகாதார அமைச்சர் மற்றும் வடக்கு அபிவிருததி, புனர்வாழ்வு, புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சர் ஆகியோரின் தலையீட்டினைத் தொடர்ந்து இந்த வேலைநிறுத்தம் ஒரு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகத்துக்கு முன்னால் நேற்றிரவு பெரும் ஆர்ப்பாட்டம்

### பேரியல் அஷ்ரப், ஹிஸ்புல்லாவை கட்சிக்குள் சேர்க்கக் கோரி

கொழும்பு,ஜூன்16

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லா ஆகியோரை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் உள்வாங்க வேண்டும் என்று கோரி அக்கட்சியின் தலைமையகமான தாருசலாம் முன்பாக நேற்றிரவு பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காததான்குடியிலிருந்து பஸ்களில் அழைத்துவரப்பட்ட சுமார் நானூறு பேர் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றிரவு ஏழு மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் நள்ளிரவுக்குப் பின்னரும் தொடர்ந்தாகத் தெரிகின்றது.

அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தங்களுக்கு முன்னால் வந்து தங்கள் கோரிக்கை குறித்து தங்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் -

இல்லாவிட்டால் ஹக்கீமின் வீட்டுக்கு முன்னால் போய் தாங்கள் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாகவும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தளகர்த்தராக ஜானக பெரேரா நியமனமாவார்?

கொழும்பு,ஜூன்16

வடக்கிற்கான இராணுவத்தளபதியாகவும் இராணுவத்தின் சிரேஷ்ட உயர் அதிகாரியாகவும் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெற்றுச்சென்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கூட்டுப் படைத் தலைமையகத் தளகர்த்தராக நியமிக்கப்படலாம் என்று கொழும்பில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

கூட்டுப்படைத் தலைமையக தளகர்த்தராகப் பணியாற்றிய ஜெனரல் றொஹான் தளுவத்த தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

மீண்டும் அவர் இலங்கைக்குத் திரும்பமாட்டார் என்று வெளியான தகவலை அடுத்தே -

(14ஆம் பக்கம் பார்க்க)

## கேரதீவுப் பாதையைத் திறக்குமாறு ஜனாதிபதிக்கும் யாழ். ஆயர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்16

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஆயத்தப் பணிகள் இடம்பெற்றுவரும் இந்த நேரத்தில் -

செஞ்சிலுவை சர்வதேசக் குழு அல்லது அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் வழித்துணையுடன் யாழ்.குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையிலான கேரதீவு - சங்குப்பிட்டி - பூநகரித் தரைப்பாதையை போக்குவரத்துக்குத் திறக்க நடவடிக்கை எடுங்கள்.

யாழ்.ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கடந்த மாதம் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு விஜயம் மேற்கொண்டபோது, இந்தப் பாதையைத் திறக்கவேண்டிய அவசிய தேவையை வலியுறுத்தி விடுதலைப் புலிகளின் தலைவருக்கு தாம் கடிதம் ஒன்றைக் கையளித்ததாகவும் ஆயர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியிலும் குடாநாட்டிலும் உள்ள மக்களின் உறவு நெருக்கததை வலியுறுத்தி, இந்தத் தரைப்பாதையைத் திறக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி இந்தக் கடிதத்தை வரைந்துள்ளார் ஆயர். (உ-3)

## பிந்துனுவெவ படுகொலைகள்:

## படையினர், பொலீஸார் மீது மொத்தம் 83 குற்றச்சாட்டுகள்

கொழும்பு,ஜூன்16

பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப் பட்டிருக்கும் படையினர் மற்றும் பொலீஸார் மீது 83 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பான வழக்கு நேற்று பண்டாரவளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் சார்பாக அரச சட்டத்தரணி ஒருவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

அதேவேளை -

இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தி வரும் தனிநபர் குழுவின் தலைவரான மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பி.எச்.கே. குலதிலக நேற்று சம்பந்தப்பட்ட முகாம் பகுதிக்கு விஜயம் செய்து

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ASSOCIATION FOR HEALTH AND COUNSELLING
## SHORT - TERM TRAINING IN COUNSELLING
## 2001/02

(A) The course will be of six months duration conducted on weekends (Saturdays & Sundays).

(B) Candidates who successfully complete part (A) will be required to do counselling under supervision for a further period of six months.

Certification will be on satisfactory completion of (A) & (B) and meet on going & final assessments.

Those certified shall be on the roster of counsellors of **'SHANTHIHAM'**

Applicants shall be;
- between 20 - 40 years of age
- with a minimum of G.C.E. O/L
- possess an aptitude for counselling
- a knowledge of English will be an advantage.

Females are encouraged to apply.

A course fee of Rs.1,000/= will be charged with a refundable deposit of Rs.1,000/= (for those who satisfactorily complete the course only)

For course details and application form contact:
**'SHANTHIHAM'**
**15, Kachcheri - Nallur Road,**
**Jaffna.**

***Apply before: 30-06-2001*** (C/17115) **- PRESIDENT.**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 1916 - 05 - 13



மரணம் 2000 - 06 - 28

### திருமதி நாகம்மா சுப்பிரமணியம்

**திதி: 2001-06-17 ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி அபரபக்கம்**

தகவல்:
**ம.ஸ்ரீந்தரன்**(ஆசிரியர்)
*34/6, வளாக வீதி,*
*திருநெல்வேலி.* (89115)

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

அபிவிருத்தி பொருளியல் நூல் வெளியீட்டு நிதி சேகரிப்பிற்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில்கள் பெற்ற இலக்கங்கள்:-

முதலாம் பரிசு - 3724 (துவிச்சக்கரவண்டி)
2 ஆம் பரிசு - 2439 (ரேப் றெக்கோட்)
3 ஆம் பரிசு - 0145 (சாச்சர் ரீயூப்லைட்)

ஆறுதல் பரிசுகள்:-
1 - 4919 - எவரடி டோச் லைட்
2 - 0814 - எவரடி டோச் லைட்
3 - 4511 - எவரடி டோச் லைட்
4 - 2890 - எவரடி டோச் லைட்
5 - 1751 - எவரடி டோச் லைட்

குறிப்பு :-
*பரிசுபெற்ற இலக்கங்கள் உரிய சிட்டைகளுடன் மன்றத்துடன் தொடர்புகொள்ளவும்.*

இளம் பொருளாளர் மன்றம்,
பொருளியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.
(89112)

## ஒலிபரப்புச் சேவை 3ஆவது ஆண்டில்

லண்டன்,ஜூன்16

லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 3ஆவது ஆண்டில் இன்று காலடி எடுத்து வைக்கின்றது.

செய்திகள், அரசியல் விவாதங்கள், ஆய்வுகள் உட்பட மற்றும் பல அமசங்கள் தினமும் இலங்கை நேரப்படி பிற்பகல் 6.30 மணிமுதல் 7.30 மணிவரை தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிற்றலை சேவையில் ஒலிபரப்பப்படுகின்றன. (உ-3)

## மயானத்தில் மண்டபம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்16

சங்கானை விளாவெளி இந்து மயானத்தில் உள்ள தகர மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது பாவனையின்றி இருந்த இந்த மண்டபத்தைத் திருத்தி உதவுமாறு பொதுமக்கள் கோரியதை அடுத்து வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஐ)

## தேர்த்திருவிழா வானொலியில் நேரடி அஞ்சல்

புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியின் யாழ்.சேவையில் நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்பட உள்ளன.

இன்று காலை 7 மணி முதல் திருவிழா நிகழ்வு வானொலியில் அஞ்சல் செய்யப்படும். (ஐ)

## மெய்வன்மை வீரர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்16

திருகோணமலையில் நடைபெறவுள்ள மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு மாவட்ட விளையாட்டு உததியோகத்தர் ஏ.ஜே.ரூபசிங்கா கேட்டுள்ளார். (உ-5)

## அஞ்சலிக் கூட்டம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.நவரத்தினம் நினைவு அஞ்சலிக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் சிற்றி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சி.இராசையா தலைமையில் நடைபெறும் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் வே.சிவராஜா, எஸ்.தவராஜா, நா.சிவபாதம், எஸ்.சிவபாலன், க.திருநாவுக்கரசு, க.தங்கவடிவேல், ஈ.மயில்வாகனம், பொ.கதிர்காமநாதன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர். (3-5)

## உளவள பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூன்16

'சாநதிகம்' உளவளத் துணையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

'உளவலுவூட்டலும் உறுதிபடக் கூறலும்' (EMPOWERMENT AND ASSERTIVENESS) என்ற தலைப்பில் உளவளத் துறை சார் வல்லுநர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளனர். (ஐ)

## நகைக்கடைகளின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்16

நகைக்கடைகள் மற்றும் அடைவு பிடிக்கும் நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு யாழ். பொலீஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.என்.குடாஹெட்டி தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும். கடைகளின் பாதுகாப்பு மற்றும் திருடர் பிரச்சினை ஆகியன பற்றி ஆராயப்படவுள்ளதால் அனைத்து உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-10)

## வாழ்த்துகின்றோம்

**சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகத் தெரிவாகியதை அறிந்த நாம்**

கிரியா கலாப முக்தாமணி
**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**
*(பிரதமகுரு, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்; ஆதீனகுரு, நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்)*

அவர்களை எல்லாம் வல்ல ஸ்ரீ. புவனேஸ்வரித் தாயை வணங்கி மனமார வாழ்த்துகின்றோம்.

*வங்கி அருகில்,*
*மானிப்பாய்.* (89100)

***ஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் -***
***விநாயகமூர்த்திக் குருக்கள்குடும்பத்தினர்.***

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1944 - 02 - 29



இறப்பு 1998 - 06 - 16

### T.லாசரஸ் லூர்துமலர்

அன்பைப் பொழிந்து பாசத்தை வளர்த்து
தெய்வமாக மறைந்த மரகத சிலையே
எங்கள் மனமே உன் கோயில்
உன் திருமுகமே நாங்கள் ஆராதிக்கும் சிலை
உம் துயர் துடைக்க நாம் தயாராகும் வேளையில்
எம்மை எல்லாம் ஆய்துயரில் விட்டு விட்டு
எங்கு அம்மா சென்று விட்டீர்?
கடலளவு மனம் படைத்த கருணைத் தாயே
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாதம்மா
எம் மனதில் பதிந்துவிட்ட வடு.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள்.**

தற்போதைய முகவரி:-
*இராசவீதி,*
*அச்சுவேலி.* (C/17118)

நிரந்தர முகவரி:-
*தோலகட்டி,வசாவிளான்.*

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் கனகம்மா

துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் கனகம்மா நேற்று (15-06-2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் செல்வக்குமார் (V.S.B. குறூப் - நெல்லியடி), விஜயகுமார்(சுவிஸ்), உதயகுமார் (நோர்வே), சந்திரகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாளினி, சிவரூபி(சுவிஸ்), சாரதா(நோர்வே), சுந்தரமோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிருந்தாபன், விதூஷா, பிரதீப், ரம்யா(சுவிஸ்), சினேகா (நோர்வே), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.செல்வக்குமார் (மகன்)
(V.S.B குறூப். நெல்லியடி)
நாகரத்தினம் (கணவர்)

(C/17119)

உ

### காரைநகர், களபூமி திக்கரை

## முருகமூர்த்தி கோயில் 5ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

*இன்று (16.06.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எம்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பூந்தண்டிகையில் திருவீதியுலா இடம்பெறும்.*

**இரவு நிகழ்ச்சிகளாக**

**முத்துச் சப்பரத்தில் முருகப் பெருமான் வள்ளி, தேவயானை சமேதரராய் எழுந்தருளி வீதியுலா வருங் காட்சி இடம்பெறும்.**

**மங்கள இசை**

★ கலாசூரி **N.K.** பத்மநாதன் குழுவினர்
★ கலாஜோதி **N.K.** கணேசன் குழுவினர்
★ கலாபூஷணம் **K.R.** சுந்தரமூர்த்தி குழுவினர்
★ கலாகேசரி **K.S.** மந்திரமூர்த்தி குழுவினர்
★ கலாவேந்தன் **S.K.** கண்ணன் குழுவினர்

**பட்டி மண்டபம் : *இன்றைய சமுதாயத்துக்கு பெரிதும் வழிகாட்டும் இலக்கியம்***
கம்பனின் இராமாயணமா? வில்லியின் பாரதமா?

**நடுவர்**
**சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)**

*திக்கரை, காரைநகர்.* (89111)

**- 5ஆம் திருவிழா உபயகாரர் .**

# மத்திய கிழக்கில் மீண்டும் வன்முறை

ஜெருசலேம்,ஜூன்16

மத்திய கிழக்கில் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன. இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் சண்டை நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான இரு நாள்களின் பின்னர் இந்த வன்முறைகள் வெடித்துள்ளன.

காஸாப் பகுதியிலேயே புதிய வன்முறைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கன்யாசி அகதி முகாமுக்கு அருகில் இடம்பெற்ற மோதலில் ஒரு பாலஸ்தீனர் கொல்லப்பட்டார்.

பலஸ்தீனர்கள் கற்களைக் கொண்டு இஸ்ரேலியப் படையினர் மீது தாக்குதல் நடத்திதாகவும் இஸ்ரேலியர்கள் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது. இதில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டார்; மேலும் 9 பேர் காயமடைந்தனர்.

தெற்கு ஜெருசலேம் பகுதியில் இஸ்ரேலியர்களின் காரை வழிமறித்த பலஸ்தீனர் ஒருவர் அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அதில் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொரு மோதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த மோதல்களுக்கும் வழமை போன்று இரு தரப்புகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டியுள்ளன.

இதேவேளை -

இஸ்ரேல் - பலஸ்தீன அதிகாரிகள் நேற்றுச் சந்தித்து சண்டை நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்தனர். புதிதாக வெடித்துள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் அவர்கள் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளுமே இந்த யுத்த நிறுத்தத்தில் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம)

# மலேசியக் கடற்பகுதியில் சூழல் பாதிப்பு அபாயம்

## நச்சுப் பொருளுடன் சென்ற கப்பல் மூழ்கியதால்

கோலாலம்பூர்,ஜூன்16

நச்சு இரசாயனப் பொருள்களை ஏற்றிச்சென்ற கப்பல் ஒன்று மலேசியக் கடலில் மூழ்கியுள்ளது. இதனால சுற்றுச் சூழலுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சூழலியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கப்பலில் இருந்த நச்சுப் பொருள்கள் கடலில் கசிவதால் ஆயிரக் கணக்கில் மீன்கள் இறந்து கரையொதுங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மலேசியாவில் இருந்து இந்தோனேசியாவின் கிழக்குத் துறைமுகமான கலிமந்தானை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பலில் தொழிற்சாலைகளுக்கான 600 தொன் பெனாயில் நச்சுப் பொருளும் 18 தொன் டீசலும் இருந்ததாக அதிகாரிகள் கூறினர்.

கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த சமயம் கப்பலின் டாங்கரில் வெடிப்பு ஏற்பட்டு நச்சு இரசாயனம் கடலில் கலக்க ஆரம்பித்ததைக் கண்ட கப்பல் கப்டன் உடனடியாக ஜோக்பூர் துறைமுகத்துக்கு அறிவித்தார். அங்கிருந்து உடனடியாக மீட்புப் படகுகள் அனுப்பப்பட்டன.

மீட்புப் படகுகள் கப்பலை கரைக்கு இழுத்து வர முயற்சி செய்தன. ஆனால் அந்த முயற்சி பலனளிக்காத நிலையில் பசீர் கடாம் அருகே கப்பலைக் கடலில் மூழ்கச் செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பலில் இருந்த 13 பணியாளர்களும் ஆபத்து எதுவும் இன்றி மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-10)

# தாய்லாந்தும் ஆஸ்திரேலியாவும் ஆள் கடத்தலை தடுக்க ஒப்பந்தம்

சிட்னி,ஜூன்16

சட்டவிரோத ஆள் கடத்தலுக்கு எதிரான ஒப்பந்தம் ஒன்றில் ஆஸ்திரேலியாவும் தாய்லாந்தும் விரைவில் கைச்சாத்திட உள்ளன.

இரண்டு வார காலத்துக்குள் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விடும் என்று ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் பிலிப் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து ஊடாக ஆஸ்திரேலியாவுக்குள் அதிகளவில் சட்டவிரோதக் குடியேறிகள் ஊடுருவி வருகின்றனர். இவர்களது ஊடுருவலைத் தடுக்க இந்த ஒப்பந்தம் பெரிதும் உதவும் என்றும் அவர் சொன்னார்.

இலங்கை, சீனா, ஈரான், கஸகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரே ஆஸ்திரேலியாவுக்குள் அதிகளவில் சட்டவிரோதமாகக் குடியேறி வருவதாக சிட்னியில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம-10)

# விசாரணைக் குழு அறிக்கை

# நேபாள மன்னர் குடும்பத்தினரை இளவரசரே படுகொலை செய்தார்

காத்மண்டு,ஜூன்16

நேபாளத்தில் மன்னர் குடும்பம் கூண்டோடு அழிக்கப்படக் காரணமாயிருந்த அரண்மனைப் படுகொலைகளை இளவரசர் திபேந்திராவே நிகழ்த்தினார் என்று இது தொடர்பாக விசாரிக்கவென நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இளவரசர் திபேந்திரா சம்பவம் நடைபெற்ற சமயத்தில் 'விஸ்கி'யும் 'ஹசீன்' என்ற போதைப் பொருளும் அருந்தி இருந்தார்.

அரண்மனையில் அன்றைய தினம் இடம்பெற்ற இராப்போசனத்தின்போது மன்னர் குடும்பத்தினர் 24 பேர் இருந்தனர். அவர்களுடன் வேறு சில விருந்தினரும் இருந்தனர்.

இளவரசர் திபேந்திராவிடம் கைத்துப்பாக்கி உட்பட 5 நவீன ரக துப்பாக்கிகள் இருந்துள்ளன. அவற்றில் ஒன்று நிமிடத்துக்கு 900 குண்டுகளை சுட்டுத் தள்ளக் கூடிய இயந்திரத் துப்பாக்கி. படுகொலைகள் இடம்பெற்ற சமயம் இவற்றில் மூன்று துப்பாக்கிகளை இளவரசர் பயன்படுத்தி இருக்கிறார்.

குடும்பத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் போது இளவரசர் இராணுவச் சீருடையில் இருந்தார். அவர் முதலில் மன்னர் பிரேந்திரா மீது சுட்டார். பின்னர் மன்னரது இளைய சகோதரர் மற்றும் உறவினர்களை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தார். அதன் பின்னர் தோட்டத்துக்குச் சென்று தனது தாயார் ஐஸ்வர்யாவைச் சுட்டுக் கொன்றார். கடைசியில் தனது சகோதரனான நிரஜானையும் சுட்டுக் கொன்றார்.

படுகொலைகளை நிகழ்த்துவதற்கு முன்னர் அன்றைய தினம் தனது படுக்கையறையில் இருந்தவாறு கையடக்கத் தொலைபேசி மூலம் காதலி தேவ்யானியுடன் மூன்று தடவைகள் உரையாடியுள்ளார். இதனை தொலைத் தொடர்புத் துறை உறுதிப்படுத்தி உள்ளது.

- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் திபேந்திராவின் உதவியாளர்கள் அளித்த சாட்சியத்தினை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் சம்பவம் இடம்பெற்றபோது இந்த உதவியாளர்கள் எங்கிருந்தார்கள் என்பது குறித்து அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(ம-10)

## நேபாளத்தில் அமைதி

மன்னர் குடும்பப் படுகொலைகளுக்கு இளவரசர் திபேந்திராவே காரணம் என்று விசாரணைக் குழு தெரிவித்த பின்னரும் காத்மண்டு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அமைதி நிலவி வருகின்றது.

கொலைகளுக்கு இளவரசரே காரணம் என முன்னர் செய்திகள் வெளியானபோது நேபாள மக்கள் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் வன்முறைகளையும் நிகழ்த்தினர்.

இதனால் விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியானதும் மக்களிடையே பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அவசர நிலைமைகளைச் சமாளிப்பதற்கென காத்மண்டுவில் கலகம் அடக்கும் பொலீஸாரும் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக அங்கு தொடர்ந்து ஆழ்ந்த அமைதி நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

உலக அரங்கில்

# செக் குடியரசில் நுழைய முயன்ற 17 இந்தியர்கள் ஆற்றில் மூழ்கி மரணம்

புதுடில்லி,ஜூன்16

ஸ்லோவாக்கியாவில் இருந்து செக் குடியரசுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 17 இந்தியர்கள் ஆற்றில் மூழ்கி இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் சட்டவிரோதக் குடியேறிகள் அங்கு செல்வதற்கான மார்க்கமாக செக் குடியரசைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு மட்டும் இவ்வாறு செல்ல முயன்ற 6 ஆயிரம் பேர் செக் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(ம-10)



உஸ்பெகிஸ்தானில் பாதுகாக்கப்பட்ட உயிரினமாக அறிவிக்கப்பட்டுள்ள அரிய இன ஆமைகள் வியாபார நோக்கத்துக்காக ரஷ்யாவுக்கு கடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உஸ்பெகிஸ்தானில் இருந்து ரயில் மூலம் கடத்தப்பட்ட 1965 ஆமைகளை ரஷ்ய – கஸாக் எல்லையில் உள்ள பலாஸ்கொவா ரயில் நிலையத்தில் ரஷ்யப் படையினர் கண்டு பிடித்தனர்.

ரஷ்ய படைவீரர் ஒருவர் ஆமைகள் கடத்தப்பட்ட பெட்டிகளைச் சோதனை இடுவதைப் படத்தில் காணலாம்.

## புதிய ஜனாதிபதி பதவியேற்பு

லண்டன்,ஜூன்16

பெருவின் புதிய ஜனாதிபதியாக அல்கன்ரோ டொலோடொ பதவி ஏற்றுள்ளார். இந்தமாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இவர் வெற்றி பெற்றிருந்தார்.

பதவியேற்ற பின்பு மக்களுக்கு உரையாற்றிய டொலோடொ -

நாட்டின் அரசியல் யாப்பு, பொதுச் சட்டங்கள் முதலானவற்றை மதித்து ஆட்சி நடத்துவேன் என்று தெரிவித்தார். ஸ்திரமற்ற பொருளாதாரம் வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றை புதிய ஜனாதிபதி உடனடியாகச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

## நாஸா நிறுவனத்தினால்

# செவ்வாய்க்குச் சென்று ஆராய பத்து விஞ்ஞானிகள் தெரிவு

2007ஆம் ஆண்டில் செவ்வாய்க்கு நேரில் சென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவென அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா 10 விஞ்ஞானிகளைத் தெரிவு செய்துள்ளது.

முன்னதாக செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்கான யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு நாஸா, விஞ்ஞானிகளிடம் கோரியிருந்தது. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட 43 பேரின் யோசனைகளில் சிறந்தவற்றைச் சமர்ப்பித்த 10 விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்கு எனத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அறிவியல் அறிவுத்திறனின் அடிப்படையில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நாஸா அறிவித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 விஞ்ஞானிகளும் இனிவரும் 6 மாத காலப்பகுதியில் செவ்வாய் குறித்த மேலதிக ஆய்வில் ஈடுபடுவதற்கென ஒவ்வொருவருக்கும் 70 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆறு மாதமுடிவில் இவர்களுக்கான இறுதித் தேர்வு நடத்தப்பட்ட பின்னர் செவ்வாயின் ஆராய்ச்சிக்காக அவர்கள் அனுப்பப்படுவார்கள் என்று நாஸா தெரிவித்தது. (ம-10)

# கனடாவுக்குள் நுழைவோருக்கு இனிமேல் 'எய்ட்ஸ்' சோதனை

## அந்த நாட்டு அரசு அறிவிப்பு

ரொறொன்ரோ,ஜூன்16

இனிவரும் காலங்களில் கனடாவுக்குள் நுழையும் குடியுரிமை கோருவோருக்கும் அகதிகளுக்கும் எய்ட்ஸ் பரிசோதனை மேற்கொள்வது என்று கனேடிய அரசு முடிவு செய்துள்ளது.

கனடாவில் உள்ள தற்போதைய நடைமுறைப்படி நாட்டுக்குள் நுழையும் ஒருவருக்கு எய்ட்ஸ் சோதனை செய்வது அவரைப் பரிசோதிக்கும் மருத்துவரின் விருப்பைப் பொறுத்தது.

புதிய கொள்கையின்படி கனடாவுக்குள் நுழையும் குடியேற்றவாசிகள், அகதிகள் அனைவரும் எய்ட்ஸ் சோதனைக்கு உட்படுத்தப்படுவது அவசியம்.

சோதனையின் போது ஒருவருக்கு எய்ட்ஸ் இருப்பது தெரிய வந்தால் அவர் ஒதுக்கி வைக்கப்படவோ வெளியேற்றப்படவோ மாட்டார். மாறாக அவர்களுக்கு இலவசமாக மருத்துவ ஆலோசனைகளும் சிகிச்சைகளும் அளிக்கப்படும் என்று குடியேற்றத் துறை அமைச்சர் ஏரினார் கப்லான் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் குறித்தும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தும் மேலதிக தகவல்கள் திரட்டுவதும்,-

எய்ட்ஸால் ஏற்படும் நிலைமைகளைச் சமாளிப்பதுமே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

(ம-10)

# மசிடோனியாவில் கிளர்ச்சியாளர்கள் யுத்தநிறுத்தம் செய்வதாக அறிவிப்பு

ஸ்கூபியா,ஜூன்16

அல்பேனியப் பிரிவினைவாதிகள் இரண்டு வாரகால யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர். மசிடோனிய அரசாங்கத்துடன் அரசியல் பேச்சு நடத்தவே யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் ஜோர்ஜ் ரொபர்ட்சன் மசிடோனிய ஜனாதிபதி, அரச அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில் மசிடோனியாவில் யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் மூலம் சரியான பலன் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

அல்பேனிய இனக் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு உதவுமாறு அந்த நாட்டு அரசு நேட்டோவிடம் உதவி கோரி உள்ளது. மசிடோனிய அரசுக்கான இந்த உதவி குறித்து நேட்டோ ஆராயும் என்று அதன் தலைமைச் செயலர் லோட் ரொபேட்சன் தெரிவித்தார்.

ஆனால் இந்த விடயத்தில் மேற்கு நாடுகளின் இராணுவ உதவி எதுவும் கோரப்படவில்லை. (ம-10)

# இதய அஞ்சலி

## திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர்)

எனது பெருமதிப்புக்குரிய தாவரவியல் ஆசிரியர் திரு. சி. குணசீலன் அவர்களின் அன்புத் தாயாரான திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தேன்.

அன்னாரது பிரிவினால் துன்புற்றிருக்கும் எனது ஆசிரியருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி சியாமளா மகாலிங்கம்,
திருமதி சிவகாமசுந்தரி மகாலிங்கம்.
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[சி/17120]

# தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்துதல்

01. 2001-05-31 ஆம் திகதியில் பூர்த்தியாக்கப்பட்ட 44 சங்கக் கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்க்காணும் கிளைகளில் 2001-06-15 ஆம் திகதி தொடங்கம் 10 நாள்கள் வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| காட்சிப்படுத்தும் இடம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் |
|---|---|---|
| 01. துர்க்காபுரம் கிளை | 01 | தெல்லிப்பழை |
| 02. உடுவில் கிளை | 02 | துர்க்காபுரம் |
| | 03 | வவுணாவத்தை |
| | 33 | மாவை மடத்தடி |
| | 34 | தெல்லி. அரச வைத்தியசாலை அருகில் |
| 03. உரும்பிராய் கிளை | 07 | கருகம்பனை |
| 04, மானிப்பாய் கிளை | 09 | கீரிமலை |
| | 11 | காங்கேசன்துறை |
| | 12 | மாவிட்டபுரம் |
| | 13 | மாவிட்டபுரம் மத்தி |
| | 14 | கொல்லங்கலட்டி |
| | 16 | கட்டுவன் |
| | 17 | குரும்பசிட்டி |
| | 29 | வீமன்காமம் |
| | 41 | மாவை - கிளானை |
| 05. கந்தரோடை கிளை | 04 | வீராங்கொடை |
| 06. தாவடி கிளை | 10 | சிமெந்து தொழிற்சாலை வாசல் |
| | 15 | வறுத்தலைவிளான் |
| | 22 | பலாலி மத்தி |
| | 27 | காங்கேசன்துறை சந்தி |
| | 30 | தையிட்டி |
| | 31 | ஊறணி |
| | 35 | மாவை கலட்டி |
| | 38 | மாங்கொல்லை |
| 07. இணுவில் மத்தி கிளை (ஆஸ்பத்திரியடி) | 05 | பன்னாலை |
| 08. கோணாவளை குட்டியப்புலம் கிளை | 18 | வடமூலை வயாவிளான் |
| | 19 | ஒட்டகப்புலம் |
| | 20 | வயாவிளான் |
| | 28 | வீமன்காமம்வடக்கு |
| | 39 | கோணாவளை குட்டியப்புலம் |
| | 40 | குரும்பசிட்டி கிழக்கு |
| 09. இருபாலை கிளை | 06 | விழிசிட்டி |
| 10. சித்தன்கேணி கிளை | 23 | பலாலி கிழக்கு |
| | 24 | மயிலிட்டித்துறை |
| | 25 | மயிலிட்டி கிழக்கு |
| | 26 | மயிலிட்டி வடக்கு |
| | 32 | பலாலிச் சந்தி |
| | 21 | பலாலி மேற்கு |
| | 37 | ஊரங்குணை |
| | 42 | திருப்பூர்—மயிலிட்டி |
| 11. இளவாலை கிளை | 08 | இளவாலை |
| 12. இணுவில் சந்தி கிளை | 36 | வசந்தபுரம் |
| | 43 | சீந்திப்பந்தல் |
| | 44 | மயிலங்கூடல் |
| 13. தலைமைகாரியாலயம் | 44 | கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் |

02. காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் சங்க உபவிதிப்படி வாக்காளர் ஆவதற்குத் தகுதியிருந்தும் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களும், முழுப் பெயரிலோ அல்லது முகவரியிலோ பிழை உள்ளவர்களும் தமது ஆட்சேபனையை 2001-06-25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, செயலாளர், தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

சி. முருகையா
செயலாளர்
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
2001-06-15

(சி/17114)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வாகன உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று, நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வாகனப் பதிவுகள், காப்புறுதி, வாகனத்துக்கான புத்தகங்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதால் சகல வாகன உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து இளைஞர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 16

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு விழாவும் சைவசமயப் பண்பாட்டுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் அன்னபூரணி மண்டபத்தில், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

(க-10-9)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

முகாமைத்துவக் கற்கைகள்
வணிகபீட
அரையாண்டுப் பரீட்சைகள்
கல்வியாண்டு
2000 / 2001

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பின்வரும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவரிடம் இருந்து 27-06-2001 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1) முதலாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை.

2) முதலாம் வருடத்தின் முதலாம் அரையாண்டுப் பரீட்சை. (விசேட பரீட்சை)

3) இரண்டாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை.

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/ வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை 20-06-2001 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்.

(சி/17117)

யாழ் திருநெல்வேலி
அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய காத்தவராய சுவாமி (உற்சவமூர்த்தி)

# மஹாகும்பாபிஷேகம்

காலம்:– விஷு வருஷம் ஆனி 3ஆம் நாள் (17-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம்.

## வருடாந்த மஹோற்சவம்

18 - 06 - 2001
திங்கள் காலை 10.00 மணிக்குக் கொடியேற்றம்

26 - 06 - 2001
செவ்வாய் காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழா

27 - 06 - 2001
புதன் காலை 10.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழா

அம்பிகை அடியார்கள் அனைவரும் விழாக்களில் கலந்துகொண்டு அன்னையின் திருவருளைப்பெற்றுக் கொள்வீர்களாக.

—தேவஸ்தானம்:

விளபர அன்பளிப்பு:
**நரேன் வீடியோ சென்ரர்**
பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி.

(89119)

உ
''கூட்டுறவே நாட்டுயர்வு''



சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில்
பணியாற்றும்
பணியாளர்கள்
கூட்டுறவு சேவையில்
25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்தமையைக்
கௌரவிக்கும்

# வெள்ளி விழா

இடம்: சங்கக் காரியாலயம்
காலம்: இன்று (16-06-2001) சனிக்கிழமை காலை 9-00 மணி
தலைவர்: திரு. ம. சற்குணசிங்கம்

## நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. கூட்டுறவுக் கொடியேற்றலும் கூட்டுறவுக் கீதம் இசைத்தலும்
3. மௌன இறைவணக்கம்
4. மறைந்த கூட்டுறவுப் பணியாளர்களுக்கான மௌன அஞ்சலி
5. வரவேற்புரை: திரு. கா. நடராசா (சங்க உபதலைவர்)
6. தலைமையுரை:
7. ஆசியுரை: சிவஸ்ரீ அ. இரத்தினசாமிக்குருக்கள்
8. தங்கப் பதக்கம் அணிவித்து விழா நாயகர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கல்.

பிரதம விருந்தினர்கள்:

1. திரு. செ. கு. சண்முகநாதன் அவர்கள் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டம்.)
2. திரு. ந. திரிலோகநாதன் அவர்கள் (J.P.U.M., தலைவர், வலி மேற்கு பிரதேச சபை)

சிறப்பு விருந்தினர்கள்:

1. திரு. க. குணராசா அவர்கள் (பிரதேச செயலர், வலி. மேற்கு)
2. திரு. செ. கனகசபாபதி அவர்கள் (கூட்டுறவு உதவி ஆணையாளர், கணக்காய்வு, யாழ். மாவட்டம்)
3. திரு. சு. கணேசமூர்த்தி அவர்கள் (கூட்டுறவு உதவி ஆணையாளர், பனை, தென்னை வளம், யாழ். மாவட்டம்)
4. திரு. பொ. அச்சுதம்பிள்ளை அவர்கள் (முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.

(சி/17116)

உதயன்

# குடிசன மதிப்பீடு: அரசியல் சதி!

குடிசன மதிப்பீட்டு பணிகள் குடாநாட்டில் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக ஊகிக்கப்படுகிறது. சனத்தொகைக் கணக்கெடுப்புச் சம்பந்தமாக நேற்றுமுன்தினம் பிரதேச செயலகங்களிலும் யாழ். செயலகத்திலும் நடைபெறவிருந்த பயிற்சி வகுப்புக்கள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாக உயர் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ தேவானந்தா ஜனாதிபதியை நேரில் சந்தித்து விளக்கியதன் பேரில், வடக்கு மாகாணத்தில் மட்டும் குடிசன மதிப்பீட்டை நிறுத்தி வைக்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்ததாக இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

தற்காலிக நிறுத்தமோ, ஒத்திவைப்போ எதுவாக இருந்தாலும் அவையும் ஏற்புடையன அல்ல. வடகில் மட்டுமன்றி கிழக்கிலும் போர் நீங்கி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு முழுமையான, உண்மையான சமாதானம் மலர்ந்த பின்னரே இங்கு குடிசன மதிப்பீடு நடத்தப்பட வேண்டும்.

அவ்வாறன்றி, அதற்கு முன்னர் எப்போது நடத்தப்பட்டாலும் இந்தக் கணக்கெடுப்பின் மூலம் அரசாங்கம் ஒப்பேற்ற நினைத்துள்ள நயவஞ்சகத திட்டம் வெற்றி பெற்றுவிடும். அந்த நயவஞ்சகத் திட்டம் குறித்துப் பலர் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை என்றே கொள்ளலாம்.

வடக்கு - கிழக்கு மகாணத்தில் கடந்த 18 வருடங்களாகப் போர் (சிறுசிறு இடைவெளிகளுடன்) தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த மாகாணத்தில் அடங்கும் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த தமிழர்களும், வடபகுதியைச் சேர்ந்த முஸ்லிம்களும் மிகப்பெரும் எண்ணிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே சென்று வாழ்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால், உண்மையான மொத்த சனத்தொகையில் சுமார் அரைவாசி மக்கள் வடக்கு - கிழக்கு அல்லாத வெளிமாவட்டங்களிலேயே இப்போது வசிக்கிறார்கள்.

குடும்பத்தில் உயிரிழப்புகளைச் சந்தித்தவர்கள், உடைமை அழிவு, வீட்டு அழிவு என்று பல வகைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் என்று பல தரப்பினரும் சொந்த மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டனர்!

கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் வடக்கு மக்களைப் போலவே, போரின் பாதிப்பினால் வேறு மாவட்டங்களுக்குச் சென்று வசிக்கிறார்கள். சிங்கள மக்களின் இடம்பெயர்வும், அகதிமுகாம் வாழ்வும் ஒப்பீட்டளவில் மிகச் சொற்பமே

கிழக்குப் பிரதேசத்தில் 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் இருந்தனர். ஆனால் பிந்திய வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து உத்தேசமாக மதிப்பிடும் போது, சிங்கள மக்களின் சனத்தொகை இரண்டாம் இடத்தை நோக்கி ஏறுமுகமாக உள்ளதை அவதானிக்கலாம்.

குடிசன மதிப்பீட்டுக்கான புதிய விதியின் பிரகாரம், குறிப்பிட்ட மாவட்டத்தில் வசிப்பவரே அந்த மாவட்டத்துக்குரியவராகப் பதியப்படுவார். சொந்த மாவட்டத்தைவிட்டு வெளி மாவட்டத்தில் தொழிலின் நிமித்தம் வாழ்ந்தாலும் வெளிமாவட்டத்துக் குரியவராகவே பதியப்படுவார்.

இந்த விதியினால் பெருந் தொகையான தமிழ் பேசும் மக்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்து மக்கள் என்று கணக்கெடுக்கப்பட மாட்டார்கள். மாகாணம் முழுவதினதும் எட்டு மாவட்டங்களிலும் சேர்த்துப் பார்த்தால், சிங்கள மக்களே அதிக எண்ணிக்கையினர் என்று காட்டப்படும்.

அதாவது வடக்கு - கிழக்கு, தமிழர்களின் தாயகம் என்ற நிலைப்பாட்டை சனக்கணக்கினால் உடைததுவிடும் அரசியல் சதி முயற்சி இது. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது கணக்கெடுப்பு விவரம் வந்துவிடும். தமிழர்களின் தாயகக் கோட்பாடு ஏற்கக் கூடியது அல்ல என்று அவ்வேளை நிராகரிக்க அது துரும்புச் சீட்டாக அரசதரப்பினால் எடுத்துப் போடப்படும்!

# மோ. சைக்கிள் சக சா. சைக்கிள் சவாரி

**வீதிகளில்** சமாந்தரமாகச் சைக்கிளில் செல்வோர் பிடிபடும் பட்சத்தில் அந்த இடத்தில் வைத்தே அவர்களிடம் இருந்து அபராதம் அறவிடவும் வழக்குத் தொடரவும் முடிவு செய்திருப்பதானது வரவேற்கத்தக்கதே! இதனை அறிவித்துள்ள யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி அவர்கள் நிச்சயம் பாராட்டுக்குரியவரே!

அதேவேளை வீதிகளில் இதேபோல இன்னொரு வகைச் சமாந்தரச் சைக்கிள் ஓட்டமும் நடைபெறுவது பொலீஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு இன்னமும் செல்லவில்லைப் போலிருக்கிறது. பாரிய வீதி விபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய அந்த ஓட்டக்காரர்களையும் பிடித்து அவர்களுக்கும் அப்படியான தண்டனை வழங்கினால்தான் எனது ஆத்மா.... இல்லை, அபிப்பிராயம் ஆகும்.

இந்த "சண் அங்கிளுக்கு" எல்லாமே பகிடிதான் என்று அலட்சியப்படுத்தாமல் நான் மேற்கொண்டு சொல்வதையும்தான் கொஞ்சம் கவனியுங்களேன்.

மோட்டார் சைக்கிள் "சக்தி"யைக் கொண்டு சைக்கிளை ஓட்டும் அதிசயத்தைத் தான் சொல்லுகிறேன். மோட்டார் சைக்கிளில் ஓடுபவர் தனது ஒரு கையை பக்கவாட்டில் பின்நோக்கி நீட்டி சைக்கிள் ஓட்டியின் ஒரு கையைப் பற்றியவாறு ஓடுவதை நீங்களும் தான் கண்டிருப்பீர்களே! இரண்டுமே ஓடும்.... இதுவும் ஒரு வகையில் சமாந்தரச் சைக்கிள் ஓட்டம்தான்.... ஒன்று மோ.சைக்கிள்.... சா. சைக்கிள்.... மீண்டும் சொல்லுகிறேன், இவர்களையும் பிடித்து...!

இத்தகைய ஓட்டங்களை சுன்னாகம் – கந்தரோடை வீதியில் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கிறது. (மேலே குறிப்பிட்ட சமாந்தரச் சைக்கிள் ஓட்டங்களுக்கும் இங்கு குறைச்சல் இல்லை. 'இளசுகளின் அடாவடித்தனமான செயல்கள் நடைபெறுவதாகக் கூறப்படும் இப்பகுதிகளில் இவைகளும் சேர்ந்தால்...) இதற்கெல்லாம் தாங்களும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர் என்று அவர்களைப் பின்பற்றி முச்சக்கர வண்டியைப் பிடித்துக் கொண்டும் உழவு இயந்திரப்பெட்டியைப் பிடித்துக் கொண்டும் சமாந்தரமாக ஓடுகிறவர்களையும் இங்கு காணமுடிகிறது.




தென்மராட்சி இடம்பெயர்வை அடுத்து இந்த வீதிப் பகுதி வழக்கத்தைவிட அதிக சுறுசுறுப்பாக விளங்கிவருகிறது. வாகனப் போக்குவரத்துக்கள், பாதசாரிகளின் நடமாட்டம்.... இவைகளைவிட பாரிய சுமைகளுடன் சைக்கிள் ஓடுகின்ற சந்தை மற்றும் விறகு வியாபாரிகள்.... இத்தனைக்கும் இடையே இந்த மோ. சைக்கிள், சக சா.சைக்கிள் ஓட்டிகள்....

இந்த பிடித்துக் கொண்டு ஓடும் சவாரியால் இவர்கள் 'சக்தி'யை மிச்சம் பிடிக்கிறார்களா அல்லது தெருவோர மக்களுக்குத் தமது சாகச விளையாட்டுக்களைக் காட்டி 'கியாதி' பெற முனைகிறார்களா என்பதுதான் தெரியவில்லை.

சும்மா சொல்லக் கூடாது. முன்னர் மானிப்பாய் அரியம் என்பவர் பலத்த சத்தத்துடன் கூடவே இடையிடையே வெடியும் போட்டுக்கொண்டு மோட்டார் சைக்கிளில் செல்கிறார் என்றால், எல்லாரும் தெருவுக்கு ஓடி வந்து வேடிக்கை பார்ப்பார்கள். அவரே மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் மோட்டார் சைக்கிளுடன் பாய்கிறார் என்றால் சனம் அங்கேயும் அள்ளுப்படும். ஆனால் இக்காலத்தவர்களுக்கு 'இதுவே தான் கதி' என்றாகிவிட்டது. பணம் தான் கொடுக்க வேண்டாம். இந்த 'சேர்க்கஸ' விளையாட்டைப் பார்த்து பாராட்டவுமா இவர்களுக்குத் தெரியவில்லை? பாவம், அவர்கள் உங்களுக்காகத் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டல்லவா இந்தச் சாதனைகளைச் செய்கிறார்கள்?

'சேர்க்கஸ' என்று வரும்போது இடையில் 'பபூனும' வரவேண்டும் அல்லவா! அவர்களும் இடையில் தோன்றி வீரர்களைப் பின்பற்றித் தாங்களும் ஏதோ சாதனை செய்வது போலச் செய்து இரசிகர்களைச் சிரிக்க வைப்பார்கள். இங்கும் அப்படிச் சிலர் வருகிறார்கள். இவர்கள் சைக்கிள் கரியரில் இருந்து கிழக்கும் மேற்குமாக ஓடிக்காட்டுகிறார்கள். (சீற்றைக் கழற்றி நல்ல விலைக்கு விற்கலாமே! என்பது இவர்களுக்கு எனது ஆலோசனை)

எப்படிச் சமாந்தரச் சைக்கிள் ஓட்டம் வீதி ஒழுங்குகளை மீறும் செயல் – வீதி விபத்துகளுக்கும் காரணமோ, அப்படித்தான் இந்த ஓட்டமும். இதுவரை அப்படி ஏற்படவில்லை என்றால் அதற்குக் காரணம் பாதசாரிகளதும் மற்றவர்களதும் எச்சரிக்கை உணர்வாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் 'தொலையப் போகிறார்கள்' – அவர்களோடு சேர்ந்து தாங்களும் 'தொலைந்து விடக்கூடாது' என்று தாங்களாகவே ஒதுங்கிக் கொள்வதால் பாரிய விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் என்றும் எப்பொழுதும் அப்படி எதிர்பார்க்க முடியுமா என்ன?

ஆம் மீண்டும் சொல்லுகிறேன் "கரணம் தப்பினால் மரணம" என்ற இந்த 'சேர்க்கஸ' சைக்கிள் ஓட்டத்தால் விபத்து நேராமைக்கு நாம்தான் காரணம்.

கொம்புளதற்கு ஐந்து முழம் குதிரைக்குப் பத்துமுழம் வம்புகரிக்கு.....

*-சண் அங்கிள்.*

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 14 மீனவ குடும்பங்களுக்கு வீடுகள்

கோண்டாவில்,ஜுன்16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டின கீழ் உள்ள 14 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பாடு பெறுபவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களாகவும்,சொந்தக்காணி உடையவர்களாகவும், ஏற்கனவே வீடு இல்லாதவராகவும் இருக்க வேண்டும்.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் நல்லூர் பிரதேச செயலக கிராம அலுவலர்கள் ஈடுபட்டுள்ளார்கள். (க-86)

## ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,ஜுன்16

திக்கம் சனசமூக நிலைய மாணவர் நூல் இரவல் பகுதி ஆரம்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே.மகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் க. இளங்கோஞானியாரும், டாக்டர் வே.ஜெயராசாவும் கலந்துகொள்வர். (க-5-173)

## இனம் காணப்பட்ட நலிவுற்ற 388 பேர்!

வலி.மேற்கு,ஜுன்16

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து வசிக்கின்ற குடும்பங்களுள் 388 பேர் நலிவுற்றவர்களாக இனம் காணப்பட்டனர்.

நலன் புரி நிலையங்களில் 158 பேரும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் 230 பேருமே இவ்வாறு இனம் காணப்பட்டவர்கள் ஆவர். இவர்களில் அதிகமானோர் கணவனை இழந்த விதவைப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-175)

## நாளை

ஆனி 3
ஞாயிற்றுக்கிழமை
திதி: ஏகாதசி
முன் இரவு 9.58 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
முன் இரவு 7.40 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 8.53 - 10.23
ராகுகாலம் : 4.23 - 5.53
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

# நாட்டு நடப்பு

## 'பகிடிவதை' - VI

கூச்ச நாச்சம் இன்றி நீயும்
குழந்தை போல நடக்கிறாய்
ஆச்சி, அப்பு பேணிக் காத்த
அரிய பண்பு அழியுதே
போச்சு, போச்சு எங்கள் பண்பு
போன தினி வரு மோடா?
சீச்சி இந்த "பகிடி வதையை"
சினந்து விரட்டி ஓட்டுவாய்.

*- விகடகவி -*

# டாக்டர்கள் வேலைநிறுத்தம் நோயாளருக்கு பெரும் பாதிப்பு

## உயிரிழப்புகள் ஏற்படும் ஆபத்து

வடக்கு - கிழக்கு மாகாண டாக்டர்கள் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தினால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டும் சுமார் 10 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளாந்தம், வெளி நோயாளர் பிரிவில் ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் பேர்வரையும், கிளினிக்குகளில் ஆயிரம் பேர் முதல் ஆயிரத்து 500 பேர் வரையும் - வார்ட்டுகளில் சுமார் 1000 பேர் வரையும் சிகிச்சை பெற்று வந்ததாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாள்களாக சிகிச்சைகள் நடைபெறாமையினால் இந்த நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். நோயாளர்களில் பலர் தினமும் வைத்தியசாலைக்கு வந்து திரும்பிச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

வேலைநிறுத்தம் மேலும் சில நாள்களுக்கு தொடரும் நிலை ஏற்பட்டால் இங்குள்ள நோயாளர்கள் மருத்துவ சிகிச்சை இன்றி உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ம-5-6-15-139)

# புலிகள் தரப்புடன் பேசும் போது சொல்ஹெய்ம் கலந்து கொள்வார்?

லண்டன்,ஜுன் 16

* நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சிகளிலிருந்து முழுமையாகப் புறந்தள்ளப்படாவிட்டாலும் அவரது பங்களிப்பு மட்டுப்படுத்தப்படும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துளளனர்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகளில் மட்டுமே சொல்ஹெய்ம் கலந்துகொள்ளக் கூடும என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் அரசுதரப்பினருடன் சுமுகமான உறவைக் கொண்டிருப்பதனால் அரசுதரப்புடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் அவரே கலந்துகொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் இருவரையும் இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தும் திட்டமே முதலில் இருந்ததாகவும் ஆனால் பின்பு இது தொடர்பாகப் பிரச்சினைகள் உருவாகிவிட்டதாகவும் நோர்வே வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

நோர்வேயின் தரப்பில் மேற்படி விடயம் தொடர்பாக மேலும் ஒருவரும் ஈடுபடுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நோர்வேயின் வெளியுறவு அமைசசர் ஜோன் ஜக்லண்டோ அல்லது இன்னொரு கனிஷட அமைச்சரோ இது விடயத்தில் ஈடுபடுத்தப்படலாம் எனத் தெரியவருகிறது. (க-10)

# அமெ. ஹவாய் பல்கலைக்கழக கல்விமான்கள் குழு கொழும்பில்

## கூட்டணி பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கொழும்பு,ஜுன்16

அமெரிக்காவின் ஹவாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள் மூவர் கொண்ட குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

சர்வதேச ரீதியிலான விடயங்களுக்குத் தீர்வு காண்கின்ற திட்டத்தைச் சேர்ந்த இந்தக் கல்விமான்கள் இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளைச் சந்தித்த இந்தக் குழுவினர் இலங்கையின் இன்ப்பிரச்சினை விவகாரம் மற்றும் யுத்தம் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர். தமிழ்மக்கள் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கடந்த கால நிகழ்வுகள் மற்றும் தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்துவதற்குக் காரணமான விடயங்கள் பற்றியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் அமெரிக்கக் குழுவினருக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி இலங்கை அரசு அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்பதையே தமிழ்மக்கள் எதிர்பார்ப்பதாகவும் இதற்கான அழுத்தத்தை சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்மக்கள் வலியுறுத்தி வருவதாகவும் கூட்டணியினர் அவர்களிடம் தெரிவித்தனர். (க-10)

## வாசகர்களின் கவனத்துக்கு!

இப்பகுதியில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடமிருந்து தரமுள்ள ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.

ஓவியங்கள் 19செ.மீ X 14 செ.மீ அளவில் வரையப்படவேண்டும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:-*

*கண்ணிவெடி விழிப்புணர்வுப் பிரிவு,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

# அரசாங்கப் பரீட்சைகளை மன்னாரிலும் நடத்துக!

## அங்குள்ள அரச ஊழியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்16

அரச ஊழியர்களுக்காக நடத்தப படுகின்ற பரீட்சைகளை இனிவரும் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் நடத்தும்படி, மன்னார் மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வடக்கின் அபிவிருத்தி,புனர்வாழ்வு; புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட அரச ஊழியர்கள் சார்பில் நூற்றிப்பதினொரு பேர் கூட்டாகக் கையெழுத்திட்டு மகஜர் மூலம் இக் கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பொதுவாக அரச ஊழியர்களுக்காக நடத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளும் கொழும்பிலேயே நடத்தப்படுவதாகவும், இதனால் இப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டிய பல அரச ஊழியர்கள் போக்குவரத்து உட்பட பல சிரமங்களை அனுபவித்தே கொழும்பு சென்று பரீட்சை எழுத வேண்டிய நிலை உள்ளதாகவும், குறிப்பாகக் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகுவதாகவும், இதனால் மன்னார் கல்வித்திணைக்களத்தினூடாக மன்னார் மாவட்ட அரச ஊழியர்களுக்கான அனைத்துப் பரீட்சைகளையும் மன்னாரிலேயே நடத்த நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மாவட்ட அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-3)

# பிரார்த்தனையில் ஈடுபட கோருகின்றார் ஹக்கீம்

கொழும்பு,ஜூன்16

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் உருவாகியுள்ள அமைதியற்ற சூழ்நிலைக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று கோரி எதிர்வரும் திங்கட்கிழமை பிரார்த்தனை மேற்கொள்ளுமாறு கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பள்ளிவாசல்களில் ஒன்றுகூடி தொழுகைகளிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறு அவர் சகல முஸ்லிம் மக்களையும் கேட்டுள்ளார்.

அதேவேளை -

அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்குவதா அல்லது தொடர்ந்து வழங்குவதா என்பது குறித்து முடிவு செய்வதற்காக கட்சியின் அரசியல் பீடம் நேற்று இரவு கூடி ஆராய இருந்தது (உ-3)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்16

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணியளவில் நிலைய மைதானத்தில் தலைவர் து.இளங்கீரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் கலந்துகொள்வார்.

(த-9-4)

## மாவனல்ல வன்முறை விசாரணை அறிக்கை

கொழும்பு,ஜூன்16

மாவனல்லப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்ற விசேட ஆணைக் குழுவின் அறிக்கை அடுத்தவாரம் பொலீஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இந்த விசேட ஆணைக்குழுவினால் இதுவரையில் சுமார் 100 பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பொலீஸ் பிரிவினரும் விசாரணைகளை நடத்தி வருவதாக விசேட ஆணைக்குழுவின் தலைவரான பிரதிப் பொலீஸ்மா ரி. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

(க-10)

## கருத்தரங்கும் நூல் வெளியீடும்

வலிகாமம் தெற்கு,ஜூன்16

'நியந்த்ரீ' அமைப்பினால் ஏற்பாடு செயயப்பட்டுள்ள கருத்தரங்கும் நூல் வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் காலஞ்சென்ற பல்கலைக்கழக பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்களால் தொகுக்கப்பட்ட 'ஸ்ரீ சண்டீ யஞ்ஞ பத்ததி' என்ற நூல் வெளியிடப்படும்.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் நூலை வெளியிட்டுவைத்து வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்.

யாழ்பபாண மாவட்ட மேலதிக மாவட்ட பதிவாளர் பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர், "ஆலய பண்பாட்டு வளர்சசியில் மொறீஷியஸ்" என்ற பொருளில் கருத்துரை வழங்குவார்.

நூல் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ச.பத்மநாதனும், நூல் நயப்புரையை சாஹித்ய சிரோன்மணி கோப்பாய் ப.முத்துக்குமார சாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

(க-ம-152-86)

## யானை தாக்கி இரு சிறுவர் பலி

கொழும்பு,ஜூன்16

யானை தாக்கியதில் இரு சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹொரவப்பத்தானைப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஒரு பெண்மணி படுகாயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-10)

### தவறுகள் இடம் பெறும் போது

# டாக்டர்களுக்கு எதிராக நஷ்டஈடு கோரக்கூடாது

## சங்கம் வற்புறுத்துகின்றது

கொழும்பு,ஜூன்16

அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளிடமிருந்து நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய முடியாத விதத்தில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நட்ட ஈட்டுக் கோரிக்கை தொடர்பான சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்து மருத்துவ அதிகாரிகளுக்கு எதிராக நஷ்ட ஈட்டுக் கோரிகைை மனுத்தாக்கல் செய்வதற்குப் பதிலாக சுகாதார அமைச்சுக்கு எதிராக நஷ்டஈட்டு வழக்குத் தாக்கல் செயயும் விதத்தில் சட்டங்களை உருவாக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அரச மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள் மிகக் குறைந்த வசதிகளுடனேயே பணியாற்றுவதாகவும் எனவே இதனால் தவறேதும் இடம்பெற வாய்ப்பு உண்டு எனவும் அவ்வாறான சூழ்நிலையில் குறித்த மருத்துவ அதிகாரிக்கு எதிராக நஷ்ட ஈடு கோருவது அநீதியானது எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்குத் தெரிவித்துள்ளது.

(ஐ)


## எண்சோதிடம்

மாணவர்கள், அரச ஊழியர்கள், வியாபாரிகள், வெளிநாட்டுப் பிரயாணிகள், நோயாளர்கள், திருமணமாகாதவர்கள், காதலர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள், கஷ்டநிலையில் உள்ளவர்கள் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் குறிப்பிட்டு எழுதுங்கள். எண்சோதிடக்கலையின் அதிர்ஷ்ட இரகசியங்களைப் பயன்படுத்தி, திட்டமான, அதிர்ஷ்டகரமான நல்வாழ்வுக்கு வழிவகுத்துத் தருவோம். இன்றே ஆங்கில பிறந்த திகதி, பெயர், கையொபபம் இட்டு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

சனி, ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம்.
காலை 8 மணி முதல் 2 மணி வரை.

எண்கலை ஆசான்
**சி.சி.கே.ஸ்ரீராஜராஜேஷ்வரன்**
*வித்தனை வீதி, வல்வெட்டித்துறை.* (89072)

## சென்ஜோன் அம்புலன்ஸ் தேசிய பாசறை 2001

சர்வதேச நாடுகள் கலந்து கொள்ளும், கல்லூரி கடேட், வெளிவாரி அணியினருக்கான ஜம்பூரி காலி லுபுதுவ, சிறீதம மகா வித்தியாலயத்தில் ஆவணி மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 4நாள்கள் நடைபெறும். பளை, சாவகச்சேரி, கரவெட்டி, கோப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். மாகாண ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் பங்குபற்றும் யாழ். மத்திய மாவட்டம் இம்முறையும் வெற்றிகள், சாதனைகள் படைக்க உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகின்றேன்.

**க.அருந்தவராஜா,**
மாவட்ட ஆணையாளர். (89074)
*18/4-1 சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.*

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் விக்னேஸ்வரன் பிரவீன்

கனடாவில் வசிக்கும் மானிப்பாயைச் சேர்ந்த
விக்னேஸ்வரன் - சறோஜினி தம்பதிகளின்
செல்வப்புதல்வன் **பிரவீன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (16-06-2001) சனிக்கிழமை கனடா மொன்றியலில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் பெரியப்பாமார்களான நாகேஸ்வரன் (கனடா), செல்வேந்திரன், பெரியம்மாமார்களான றெயினா (கனடா), றாகினி, சித்தப்பாமார்களான ஆனந்தபாஸ்கரன் (கனடா), அதிசயராஜா (லண்டன்), சுரேந்திரராஜ் (பிரான்ஸ்), கஜேந்திரராஜ் (லண்டன்), மன்மதராஜா (கொழும்பு), மோகன்ராஜ் (பிரான்ஸ்), நிக்ஷன்ராஜ், சித்திமார்களான உமா (கனடா), ஜலித்தா (லண்டன்), பிறேமினி (பிரான்ஸ்), சித்தி பிரிந்தினி (ஆசிரியர்), மாமன்மார்களான தேவராசா, உதயகுமார் (பிரான்ஸ்), இராஜகுமார் (கொழும்பு), வேல்குமார், அருள்க்குமார், அத்தைமார்களான நாகேஸ்வரி, றோமியா (பிரான்ஸ்), இராஜநிதி மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் யாவரும மானிப்பாய் மருதடி விநாயகரின் அருள்பெற்று பல்கலையும்கற்று சீரும சிறப்புடனும் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*முதலாம் குறுக்கு,*
*இணுவில் வீதி,*
*மானிப்பாய்.* (89062)

இ.வேல்குமார்.
(மாமா)

# T.B.C. வானொலி லண்டன்

## 16.06.2001 இல்

வானலைகளில் 3ஆவது வருடத்தில்
காலடி எடுத்து வைக்கிறது

**தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் லண்டன்**

செய்திகள், அரசியல் விவாதங்கள், ஆய்வுகள், உங்கள் உறவுகளின் குரல்களில் தொலைபேசி மூலம் ஊரோடு உறவாட உரையாடல் நிகழ்ச்சிகள் என்று பலவற்றுடன்

தினமும் S.W.2 இல் 13 மீற்றரில் 21590 கிலோஹேட்சில் இலங்கை நேரம் மாலை 6.30 மணிமுதல் 7.30 வரை சிற்றலை ஒலிபரப்பில் உங்களையும் நாடி வருகிறது.

TAMIL BROADCASTING
CORPORATION
P.O.BOX - 383,
HARROW
HA 1 3FW
U.K.

தொலைபேசி - 0044 (20) 88640909
தொலைநகல் - 0044 (20) 88647778

(C/17102)

# வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்த இசை நாடகங்கள்

பழைய இசை நாடகங்கள் வாழ்க கையின் வழிகாட்டி போன்றவை காரணம் அவற்றில் இடம்பெற்ற உண்மை பேசும் பண்பு, ஒழுக்கம், நேர்மை, சமயப்பற்று, சகோதரபாசம், கற்பு நெறியை வலியுறுத்தும் தன்மை என்பன மக்களை நல்வழிப்படுத்தி புது வாழ்க்கைக்கு அழைத்துச் செல்கின்றன.

இவ்வாறு கூறுகிறார் ஈழத்தின் மூத்த இசை நாடகக் கலைஞர்களில் ஒருவரான கலைமாமணி வி.ரி.செல்வராசா (வயது 66).

காங்கேசன்துறை வசந்தகானசபா வளர்த்தெடுத்த இசை நாடகக் கலைஞர்களில் செல்வராசா என்ற பெயரில் இருவர் விளங்குகின்றனர். அவர்களில் ஒருவர் சீரணி, சண்டிலிப்பாயூர் கலைஞன் 'கலாபூஷணம்' வி.



இசை நாடகக் கலைஞர்
'கலைமாமணி'
வி.ரி.செல்வராசா

என்.செல்வராசா. மற்றையவர் காங்கேசன்துறையூர் மரபு வழிக் கலைஞர் கலைமாமணி வி.ரி.செல்வராசா.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் மின்னியலாளராக இருந்து ஓய்வு பெற்று தற்போதும் இசை நாடக மேடைகளில் 'கணீர் கணீர்' என்ற குரலுடன் பாடி நடிக்கும் கலைஞர் வி.ரி.செல்வராசாவை 'கலைச்சுடருக்'காகச் செவ்வி காணச் சென்றேன்.

இரண்டு கரங்களினாலும் அன்புடன் வரவேற்று உபசரித்து 'இசை நாடகம்' குறித்து என்னோடு மனம் விட்டுப் பேசத் தொடங்கினார்.




1935ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி காங்கேசன்துறையில் பிறந்த வி.ரி.செல்வராசா இசை நாடகத்துக்கெனத் தம்மையே அர்ப்பணித்த ஓர் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவரது தந்தை வழிப் பேரனாரான பைரவி என்பவர் சிறந்த இசை நாடகக் கலைஞர். அது மட்டுமன்றி மிருதங்கம் வாசிப்பதில் கைதேர்ந்த கலைஞரும் கூட. தாய் வழிப் பேரனாரான அண்ணாவியார் இராமர் என்பவர் இசை நாடகம், இசைக் கருவிகளை மீட்டுவதில் மிகுந்த ஆற்றல் மிக்கவர். இசை நாடகத்துக்கே உரியவரான நடிகமாமணி வி.வி.வைரமுத்துவின் மைத்துனர்களில் ஒருவரே இன்றைய 'கலைச்சுடர்' நாயகன் வி.ரி.செல்வராசா. இத்தகைய கலைக்குடும்பத்தைச் சேர்ந்த வி.ரி.செல்வராசா தனது கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலை என்பவற்றில் தொடர்ந்தார்.

பாடசாலை வாழ்க்கையிலேயே இசைநாடகத்தில் சிறந்து விளங்கிய இவர் தனது 12ஆவது வயதில் 'ச்த்தியவான் சாவித்திரி' நாடகத்தில் 'சாவித்திரி' பாத்திரம் ஏற்று நடித்தார். பிரபல ஆர்மோனிய வித்துவானாக விளங்கிய ஜோசப் சின்னத்துரை என்பவர் வி.ரி. செல்வராசாவை 'சாவித்திரி' பாத்திரம் மூலம் கலையுலகுக்கு அறிமுகம் செய்தார்.

கலையார்வம் காரணமாக காங்கேசன்துறை வசந்தகானசபாவுடன் தன்னை இணைத்துக்கொண்ட வி.ரி. செல்வராசா, நடிகமணியுடன் இணைந்து மரபுவழி இசைநாடகங்கள அனைத்திலும் நடிக்கும் திறமையைப பெற்றார். இதன் மூலம் இசை நாடகங்களில் எநதவொரு பாத்திரததையும் ஏற்று நடிக்கும் ஆற்றல் இவருக்கு உண்டாயிற்று.

*இசை நாடகக் கலைஞர் வி.ரி.செல்வராசா நடித்த நாடகங்கள் சிலவும் அவற்றில் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களும்.*

| நாடகங்கள் | பாத்திரங்கள் |
|---|---|
| அரிச்சந்திர மயான காண்டம் | அரிச்சந்திரன் |
| | சந்திரமதி |
| | சத்தியகீர்த்தி |
| சத்தியவான் சாவித்திரி | சாவித்திரி |
| ஏழுபிள்ளை நல்லதங்காள் | நல்லதங்காள் |
| ஞானசவுந்தரி | ஞானசவுந்தரி |
| | தர்மராஜா |
| வள்ளி திருமணம் | வள்ளி |
| கோவலன் கண்ணகி | கண்ணகி, மாதவி |
| சாரங்கதாரா | சித்திராங்கி |
| மந்திரிகுமாரி | இராஜகுமாரன |
| பவளக்கொடி | பவளக்கொடி |

சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரமயான காண்டம், ஸ்ரீவள்ளி, ஏழு பிள்ளை நல்ல தங்காள், ஞானசவுந்தரி, கோவலன் - கண்ணகி முதலிய இசைநாடகங்களில் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் திறமை வாய்ந்தவராக வி.ரி.செல்வராசா மிளிரத் தொடங்கினார்.



"ஞானசவுந்தரி" இசைநாடகத்தில் தர்மராஜாவாக வி.ரி.செல்வராசா தோன்றும் காட்சி.

காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் தன்னை மின்னியலாளராக இணைத்துக்கொண்ட வி.ரி.செல்வராசா அங்கு நாடக கலாமன்றம் ஒன்றை அமைத்து அந்த மன்றம் மூலமும் இசை நாடகங்களை மேடையேற்றினார். மாதனை மகாலிங்கம், மாவைசிதம்பரம் செல்வராசா, அல்வாய் விவேகானந்தன் ஆகியோர் இந்த நாடக கலாமன்றத்தின் முக்கிய கலைஞர்கள்.

**பேட்டி: ஆனந்தன்**

வி.ரி.செல்வராசாவின் கலைத்திறமையை-ஆற்றலை-வியந்த சிமெந்து ஆலையினர் இவருக்கு மிகப் பிரமாண்டமான அளவில் பாராட்டுவிழா ஒன்றையும் நடத்தினர். இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வி.ரி.செல்வராசாவுக்கு 'கலைமாமணி' என்ற விருதினை வழங்கினார்.

வி.ரி.செல்வராசா நடித்த இசை நாடகங்கள் யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலும் மேடையேறின. வன்னி, மன்னார், கொழும்பு, கண்டி முதலிய இடங்களிலும் அவரது இசை நாடகங்கள் மேடையேறின.

(வளரும்)

# தமிழில் சிறுவர் நாடகங்கள் - ஒரு தேடல்

இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் அமைந்தது தமிழ். "நாடகத்தமிழ் என்ற ஒரு பிரிவு தமிழ்மொழியில் இருப்பது போல உலகிலுள்ள மற்றெந்த மொழிகளிலும் நாடகப் பிரிவு என்பது இலலை. ஆகவே, நாடகத் தமிழ் என்பது தமிழ்மொழி ஒன்றிற்கே உரிய சிறந்த செல்வமாகும்". தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ்நாடகம் இருந்திருக்கிறது என்பதற்கு 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' எனத் தொல் காபபியத்தில் வரும் தொடர்கொண்டு அறியமுடிகின்றது. தமிழில் நாடகம் நன்கு வளர்ந்திருந்தது என்பதற்கு சிலப்பதிகாரத்தில் பல சான்றுகள் இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாதிபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலிய நூல்கள் முற்காலத்தில் வழக்கில் இருந்து பின்னர் அழிந்துள்ளன என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இடைக் காலத்தில் பௌத்த சமண தலையீட்டால் வளர்ச்சி குன்றிய தமிழ நாடகம் பின்னர் ராஜராஜசோழன் காலத்தில் மீண்டும் வளர்ச்சி பெற்றது என்றும் அறியப்படுகிறது.

19ஆம் நூற்றாண்டின் கடைசியில் தமிழ்நாடகத்தில் திருசங்கரதாஸ் சுவாமிகளின் வருகையால் புதிய திருப்பம் ஏற்பட்டது எனலாம். அவர் பழைய நாடகங்களை ஒழுங்குபடுத்தியும், புதிய நாடகங்களை எழுதியும் தமிழ் நாடகத்துறைக்கு புத்துணர்வினை ஏற்படுத்தினார். அபிமன்யு, சுந்தரி, சீமந்தினி, பவளக்கொடி, பிரகலாதன், சிறுத்தொண்டர், சத்தியவான் சாவித்திரி, சதிசுலோ சனா, வள்ளி திருமணம் போன்ற சுமார் நாற்பது நாடகங்களை இவர் எழுதினார்.

தமிழுக்கும் நாடகம் புதிதல்ல. தமிழருக்கும் நாடகம் புதிதல்ல. எனவே இன்றைய தேடலின் அவசியம் என்ன என்ற வினா எழுகின்றது. இருப்பதைத் தேடுவதில்லை. இல்லாததை தேடுவதுண்டு. இன்றேல் முன்னர் இருந்து தொலைந்ததைத் தேடுவதுண்டு. தமிழில் நாடகம் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது என்பது உண்மை. எனவே இன்றைய தேடல் முன்னர் இருந்து பின்னர் இடைக் காலத்தில் இல்லாமல் போய்விட்டதைத் தேடும் தேடலாகத்தான் இருக்க முடியும்.

**நாடகம் என்றால் என்ன?**

ஒரு கதையை, ஒரு நிகழ்வை நடிப் பதன் மூலம் காட்டும் கலை வடிவம் நாடகம் எனலாம். "அமையும் பாணிகளால் நாடகத்தின் வகைகள் வேறுபடலாம். ஆனால் அவற்றின் குறைந்தபட்ச பொதுத்தன்மை அவை யாவற்றையும் நாடகம் என்ற வடிவத்துக்குள் அடக்கும். நாடகம், நடிப்பை ஊடகமாகக் கொண்டு அவைக்கு ஆற்றும் கலை. இங்கு நடிப்பு, அவை ஆகிய இரண்டும் குறைந்தபட்சக்

**கலாநிதி**
***வேந்தனார் இளங்கோ***

கூறுகளாக அமைவதைக் காணலாம். அஃதாவது - நடிகர் பார்வையாளர் இவை இரண்டுமே நாடகத்தின் பிரிக்க முடியாத. ஆனால் அதேவேளை வேறு வேறான இரு கூறுகள். இவ்விருசாராருக்கும் உள்ள நேரடித் தொடர்பே நாடகம் என்கிற அரங்கக் கலைவடிவத்தின் அடித்தளம்" என்கிறார் திரு. இளைய பத்மநாதன்.

நாடகம் என்பது பார்வையாளர்களுக்காக நடித்துக் காட்டப்படும் கலை வடிவம் என்று கொள்ளலாம். அப்படியாயின் பார்வையாளர்களின் வேறுபட்ட இயல்புகளுக்கமைய நாடகங்கள் பிரிக்கப்படலாமா என்ற வினா எழுகின்றது. பார்வையாளர்கள் சிறுவர்களாக இருந்தால் அவர்களுக்காக நடித்துக் காட்டப்படும் நாடகங்கள 'சிறுவர் நாடகங்கள்' (Children's Drama) எனக் கணிக்கப்பட லாம். அதேபோல் பார்வையாளர்கள் இளையோராக இருக்குமிடத்து அவாகளுக்காக நடித்துக்காட்டப்படும் நாடகங்கள் 'இளைஞர் நாடகங்கள்' (Youth's Drama) எனவும் கருதப்படலாம். குழந்தைகளுக்காக எழுதப்படும் கவிதைகள் குழந்தைக் கவிதைகள் ஆகின்றன. சிறுவர்களுக்காக எழுதப்படும் கதைகள் சிறுவர் கதைகள் ஆகின்றன. இவற்றைப் போலவே நாடகங்களும். எனவே தமிழில் சிறுவர் நாடகங்கள் இல்லையா என்ற வினாவிற்கு நாம் பதில் காணவிரும்பின், சிறுபிள்ளைகளை பார்வையாளராக கருதி அவர்களுக்காக நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டுள்ளனவா என்ற வினாவிற்கு நாம் விடையளிக்க வேணடும். பாடசாலைகள் தயாரித்த பல நாடகங்கள் சிறுவர்களைப் பார்வையாளராகக் கருத்தில் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றைச் சிறுவர் நாடகங்கள் எனக் கருதலாம்.

சிறுவர் கதைகள், குழந்தைக் கவிதைகள் என்பவற்றிற்கும் சிறுவர் நாடகங்கள் என நான் மேற்குறிப்பிட்டவற்றிற்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கின்றது. சிறுவர்களுக்காக கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுவோர் பொதுவாக வயது வந்தவர்கள். அவர்கள் அத்துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள். அவர்கள் சில சமயங்களில் குழந்தைகளுக்காகவும் எழுதுவார்கள். பெரியவர்களுக்காகவும் எழுதுவார்கள். அதாவது குழந்தைக் கவிதைகள், சிறுவர் கதைகள் என்பன பொதுவாக பெரியவர்களால் சிறுவர்களுக்காகப் படைக்கப்படுவன. எனவே இந்த அணுகுமுறையைக் கையாண்டால், சிறுவர்களுக்காகப் பெரியவர்கள் நடித்துக்காட்டும் நாடகங்களே சிறுவர் நாடகங்கள் என்று முடிவாகின்றது. அப்படியாயின் சிறுவர்களைப் பார்வையாளர்களாகக் கருதி சிறுவர்கள் நடித்துக் காட்டும் நாடகங்களை எவ்வகையில் சேர்ப்பது என்ற வினா எழுகின்றது. இங்கு தமிழ்ப் பாடசாலைகள் மேடையேற்றிய நாடகங்கள் பலவும்

(8 ஆம் பக்கம் பார்க்க)



நீண்ட கால இடைவெளியின் பின்னர் இம்மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. வேம்படி மகளிர் கல்லூரி மாணவியும் நாட்டியக் கலைமணி செல்வி அகல்யா சுந்தரத்தின் சிஷ்ஷையுமான செல்வி எலிசபேத் சுபத்திரா பீற்றர்சிங் ஓர் அனுபவமுள்ள கலைஞரைப் போல மிகச்சிறப்பாக நடனமாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். பல்வேறு கட்டங்களில் அவரது நாட்டியத் தோற்றங்களை மேலே காணலாம்.

(படங்கள்:குருநகர்ச் செய்தியாளர்)

# தமிழில் சிறுவர் நாடகங்கள்.....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்களாலும், இளைஞர்களாலும் நடித்துக் காட்டப்பட்டனவே. இவை சிறுவர் நாடகங்கள் இல்லையா?

### சிறுவர் நாடகங்கள்

**"Children's Drama means all forms of theatre by and for children It includes those phenommena described as 'creative dramatics', 'children's theatre' and 'recreational theatre'."** சிறுவர்களாலும், சிறுவர்களுக்காகவும் நடிக்கப்படும் அனைத்துக் கலைவடிவமும் சிறுவர் நாடகங்கள் என்று கருதப்படுகின்றன. சிறுவர் நாடகங்களை நடிப்பவர்கள் சிறுவர்களா அல்லது பெரியவர்களா என்பதற்கமைய பொதுவாக வேறுபடுவது குறைவு. எனினும் சில மேற்கத்தைய நாடக ஆர்வலர்கள் அவற்றைத் தெளிவு நோக்கி வேறுபடுத்த முயல்கிறார்கள்.

**'Creative dramatics'** என்பது சிறுவர்களை சிருஷ்டிகரமான நாடகப் பாணியில், தமது கருத்துக்களை கூறவழிகாட்டுவதாகும். இதன் நோக்கம் நாடகத்தை நடித்துக் காட்டுவதல்ல. மாறாக கலை வடிவமொன்றினூடாக சிறுவர்கள் தங்கள் சிருஷ்டிகரமான கற்பனை வளத்தைத் தெரியப்படுத்த இடம் கொடுத்தலேயாகும். இதனால் சிறுவர்களின் சிந்தனை வளர்ச்சியடையும் என ஆர்வலர்கள் கருதுகிறார்கள். **'Creative dramatics'** என்பது சிறுவர்களை ஒரு செய்முறை ஒழுங்கில் **(Process)** ஈடுபடுத்துகின்றது. இந்த ஈடுபாடு நாடகத்தை நடித்துக் காட்டுவதற்கு உதவலாம்.

**'Children's theatre'** என்பது முறைமையான நாடக அனுபவத்தைக் குறிக்கின்றது. இங்கு சிறுவர்களைப் பார்வையாளராகக் கொண்டஓர் அவையில் ஒரு நாடகம் நடித்துக் காட்டப்படுகின்றது. இங்கு நடித்துக் காட்டுபவர்கள் பொதுவாகப் பெரியவர்கள். சிறு பிள்ளைக்குரிய பாத்திரத்தை சிறுபிள்ளை செய்வதுண்டு. இதன் நோக்கம் பார்வையாளர்களின் நாடக அனுபவ எதிர்பார்ப்பை ஈடு செய்தலாகும். நடிப்பவர்களின் சிந்தனை வளர்ச்சியோ, அபிவிருத்தியோ இங்கு முன்னிடம் பெறவில்லை. அவையில் இருப்போர் இளைஞராக இருப்பின் அது **'youth's theatre'** ஆகின்றது. இங்கு செய்முறை ஒழுங்குக்கு தனியான இடம் கொடுக்கப்படவில்லை. செய்கையே **(Performance)** முன்னிடம் பெறுகின்றது.

**'Recreational drama'** என்பது சிறுவர்கள் சிறுவர்களுக்காக நடித்துக்காட்டும் முறைமையான நாடகத்தைக் குறிக்கும். இங்கு பார்வையாளர்களின் ரசிகத்தன்மை எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அந்த அளவிற்கு அல்லது அதிலும் கூடிய அளவிற்கு நடிப்பவர்களின் அனுபவமும், வளர்ச்சியும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நாடகங்களில் செய்முறை ஒழுங்கும், செய்கையும் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. பாடசாலை மாணவர்கள் நடித்து மேடையேறும் நாடகங்கள் பொதுவாக இவ்வணியில் சேர்கின்றன. இந்நாடகங்களின் வெற்றி தோல்வி பார்வையாளர்களால் தெரிவிக்கப்படும். பார்வையாளர்களின் எதிர்பார்ப்பை ஈடு செய்ய முடியாவிட்டால் அது நடித்த சிறுவர்களின் வளர்ச்சியைப் பாதிக்க இடமுண்டு. எனவே இந்நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுபவர்கள் பொருத்தமான பாத்திரங்களை பொருத்தமான பிள்ளைகளுக்கு கொடுக்கும் திறமை கொண்டவர்களாக இருத்தல் அவசியம். சிறுவர்கள் தமது நண்பர்களையும் பெற்றோர்களையும், உறவினர்களையும் வெற்றிகரமான நாடகமொன்றில் பங்குபற்றுவதன் மூலம் திருப்திப்படுத்துகிறார்கள். இதனால் அவர்களின் தன்னம்பிக்கை வளரும்.

சிறுவர்கள் தொடர்பாக நாடகங்களை மேடையேற்றுபவர்கள் பொதுவாக பாடசாலையினரே. அவர்களின் நாடகங்கள் பொதுவான நோக்கில் சிறுவர் நாடகங்கள் எனக் கருதப்படலாம். எனினும் அவற்றை **'recreational drama'** என்ற நாடகங்களாகக் கருதலே சிறப்புடைத்து. நாடகங்களை அவை கையாளும் கதையின் அடிப்படையில் மட்டும் வகைப்படுத்தி, அதன் விளைவாக கையாளப்பட்ட கதை சிறுவர் நாடகத்திற்குப் பொருத்தமில்லை எனக் கருதி அந்நாடகங் களை சிறுவர் நாடகம் இல்லை எனக் கருதுவது ஏற்புடையதன்று. ஒரு கதையைப் பார்க்கும் கோணத்தைப் பொறுத்து அதன் கருப்பொருள் மாறலாம். ஒரே கருப்பொருளை சிறுவர்க்குக் கூறுவதற்கு ஒரு கதையும் பெரியவர்களுக்குக் கூறுவதற்கு மற்றொரு கதையும் இருப்பதுபோல், பார்வையாளரின் வயதிற்கும், அனுபவத்திற்கும் ஏற்ப தென்படும் கருப்பொருளும் வேறுபட இடமுண்டு.

### முடிவுரை

தமிழில் சிறுவர் நாடகங்கள் என்ற தேடலுக்கு கிடைத்த பதில் தமிழில் பல சிறுவர் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இன்றும் மேடையேற்றப்படுகின்றன என்பதே. தமிழில் சிறுவர் நாடகங்கள் இல்லை என்ற கூற்றுத் தவறானது. பார்வையாளர்களின் ரசனைக்கு முன்னிடம் கொடுத்து மேடையேற்றப்படும் முறைமையான சிறுவர் நாடகங்கள் **(Child theatre)** பல இதுவரை மேடையேற்றப்படவில்லை. எனினும் அவை விரைவில் மேடையேறும் என எண்ண இடமுண்டு.

*(ஆஸ்திரேலிய மெல்பன் நகரில் நடைபெற்ற எழுத்தாளர் விழா-2001 கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை)* ☆

# 2 .ஈழத்தமிழர் கொச்சினில் கைது!

போலி ஆவணங்களுடன் இந்தியாவின் கொச்சின் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் டுபாய் செல்ல முயன்ற ஈழத்தமிழர் இருவர் நேற்று இந்திய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் வைத்திருந்த பயண ஆவணங்களில் நாகராஜா மற்றும் மாலினி என்ற போலிப் பெயர்கள் இடம்பெற்றிருந்ததாகவும் -

பிரான்ஸ் சென்றடைவதே இவர்கள் இருவரினதும் நோக்கம் எனவும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-ஒ-10)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



## செல்வன் சுந்தரேஸ்வரன் நிதீசன்

சுன்னாகம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த
சுந்தரேஸ்வரன் - கீதாஜினி தம்பதிகளின்
செல்வப்புதல்வன் **சு.நிதீசன்**

தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று (16-06-2001) சனிக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். நிதீசனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா (சுவிஸ்), அம்மமா (கொழும்பு), பெரியப்பா (கனடா), பெரியம்மா (கனடா), சிவா சித்தப்பா (சுவிஸ்), சித்தி (சுவிஸ்), யோகன் சித்தப்பா (சுவிஸ்), சித்தி (நீர்கொழும்பு), கலாஜினிசித்தி (கொலன்ட்), துர்க்கா சித்தி (கொழும்பு), துஷி மச்சாள் (யா/வேம்படி 2001 உயர்தரம்), துஷியந்த மச்சாள (கனடா), அண்ணாமாரான தர்ஷன், கஜன், அருண் (கனடா), அக்கா சிவானி (சுவிஸ்) மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*ஐயனார் கோயிலடி,*
*சுன்னாகம்.*

சி.சுந்தரேஸ்வரன்
(ஜெயகிருஷ்ணா)

(89018)



## 90ஆம் நாள் கலையாத நினைவில்

தோற்றம் 09 - 04 - 1983



மறைவு 19 - 03 - 2001

## செல்வன் முத்துக்குமாரு சுந்தர்ராஜ்

(2002, உயிரியல் பிரிவு மாணவன், யா/ஹாட்லிக் கல்லூரி)

*எம் இனிய சுந்தரமே!*
காலங்களில் கரைந்து போகாத உன் முகம்
காலத்தின் கோலமாய் விதியின் சதியாய்
கடுதியில் கலைந்ததுவோ........கலையாது
என்றும்........ என்றென்றும்.................

*எம் இனிய சுந்தர ரூபமே!*
உன் அழகிய சுந்தர வதனம் மறைந்து
மூன்று திங்கள் சென்றதுவோ?
உன் நாமம் தென்றலோடு தென்றலாய்
மறைந்தது ஏனோ?
உற்றவர் மட்டுமின்றி உற்ற நண்பர்கள் நாமும்
என்றும் உன் நினைவில்.....

*உன் நினைவில் நிற்கும்:*
மாணவ நண்பர்கள்.

*பருத்தித்துறை.*

(89040)



ஒரு வருடத்துக்குள் 1000க்கும் மேற்பட்ட கண்ணாடிகளை
வழங்கி சோதனையின் மத்தியிலும் சாதனைகள் பல
படைத்துக்கொண்டிருக்கும்
மாவட்ட வைத்தியசாலை - வல்வெட்டித்துறை
இடம்பெயர்ந்த மக்களின் இன்பவிழா

300 மக்களுக்கு 600 கண்களுக்கு

## இலவச கண்ணாடி வழங்கும்
## கோலாகலமான ஆறாவது திருவிழா

விழாவினை ஆசீர்வதித்து முதல் கண்ணாடிகளை வழங்கும்
உத்தம சீலர்கள் பேராசிரியப் பெருந்தகைகள் -

கலாநிதி அருணாசலம் சண்முகதாஸ்
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

யாழ்.பல்கலைக்கழகம்

விழாவினைச் சிறப்பித்து வாழ்த்துரை வழங்குவோர்

திரு. **G.R.** இராஜசிங்கம்
பிரதம இணைப்பாளர்
G.T.Z, யாழ்ப்பாணம்.

திரு. ஆ. சிவசுவாமி
பிரதேச செயலர்,
பருத்தித்துறை.

திரு. சு. புத்திசிகாமணி
பிரதேச செயலர்,
பளை.

திரு. **V.P.** வேலாயுதபிள்ளை
உதவி அரசாங்க அதிபர்,
மருதங்கேணி.

ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்புச்சொற்போர் ஆற்றும்
அறிவுடை வள்ளல்கள்

திரு. **S.** சிவஞானசுந்தரம்
தலைவர், ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

திருமதி த. சுரேந்திரநாதன்
அதிபர், கெருடாவில்,
இ. த. க. பாடசாலை.

திரு. இ. செ. இரத்தினகுமார்
தலைவர், வர்த்தகர் சங்கம், உடுப்பிட்டி.

17-06-2001 ஞாயிறு காலை 10 மணி

வைத்தியசாலையில் 20-05-2001 அன்று நடத்திய கண்பரிசோதனையின் போது தெரிவான மக்களுக்கு **வைத்தியசாலைஅபிவிருத்தி நிதியிலிருந்து** தகுதிபெற்ற அனைவருக்கும் இலவசமாக அவர்களுக்குரிய கண்ணாடி வழங்கப்படும்.

மாவட்ட வைத்திய அதிகாரி,
உத்தியோகத்தர்கள்,
வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர்.

**கண்ணாடிகளை உரிய நேரத்துக்கு என்றும் தந்துதவும் கண்ணாடி மன்னன் யாழ்நகர். S.M.பெர்னாண்டோ நிறுவனத்தினருக்கு என்றும் எம் நன்றிகள்.**

(89025)



யாழ்நகரில்

## SKY COMPUTER SYSTEMS

**05 De Vas Avenue
Colombo - 04**
Tel 075-361229, 075-371229

யாழ்நகரில்
"SKY COMPUTER SYSTEMS"
**தனது கணனி சேவையினை விரிவுபடுத்தியுள்ளது.**

எமது நிறுவனத்தால்

- ☆ Computer Supply & Maintenance
- ☆ Computer Software Sales & Installation
- ☆ Computer Hardware Sales & Installation
- ☆ Computer Trouble Shooting & Updating
- ☆ CD Writing
- ☆ New Mp3, Mp4 (Audio & Video)
- ☆ Cleaning CD's

சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் Tamil Software's இலவசமாகக் கொடுக்கப்படும்.

☆ மிகக் குறைந்த விலைகளில் கணனிகள் தரமாக வழங்கப்படுகின்றன.

எமது நிறுவனத்தினால் புத்தம் புதிய **Software** கள் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன.

Computer Software களை எமது முகவர்களூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலும் விவரங்களுக்கு**

**K YOGARS COMPLEX**
*11A, Parameswara Junction,
Thirunelveli.
TP.2104.*

**K YOGARS COMPLEX**
*K.K.S. Road,
Inuvil
TP.3573.*

(89051)

# சிறப்புத் தரும் ஒழுக்க வாழ்விற்கு அடிப்படை மனிதன் மனத்தால் உண்மையாக வாழ்தலே

**யாழ்.சைவ பரிபாலன சபையினரின் பட்டமளிப்பு - பரிசளிப்பு விழா கடந்த வாரம் நடைபெற்றது. "கல்வியின் நோக்கம்" என்ற பொருளில் ஆற்றப்பட்ட உரையின் கட்டுரை வடிவம் இது. முதலாவது பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமாகியது. இது இரண்டாவது பகுதியாகும்.**

ஒழுக்கம் என்பதன் முழுமையான கருத்து என்ன ?

சிந்தனையிலே உண்மை இருந்தாற்றான் நாம் நேர்மையாகவும் நீதியாகவும் நன்மை செய்பவர்களாகவும் வாழ முடியும். *"நேர் பட ஒழுகு"* என்பது ஔவை வாக்கு. உண்மை, நீதி, உலக ஒழுக்கம் என்பவற்றிற்கு ஒரு தனிச் சொல்லாக ஔவை நேர் என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்.

ஒழுக்க வாழ்விற்கு அடிப்படை மனதால் உண்மையாக வாழ்தல். மனதில் உண்மை இருந்தால் பேச்சில் உண்மை வரும். சிந்தனையும் பேச்சும் உண்மையாக இருந்தால் செயல்கள் செம்மையானதாக அமையும். உண்மையான சிந்தனையும் உண்மையான பேச்சும் செம்மையான செயலும் ஔவையாரால் சீரமை என அழைக்கப்படுகிறது.

"சீரமை மறவேல்" என்பது அவர் வாக்கு.

களவு, கோபம், குரோதம், துரோகம் , செருக்கு என்பன கீழ்மையான செயற்பாடுகள். அவை தோன்றும்போது, துணியிலிருந்து அழுக்கை அகற்றிவிடுதல் போல, மனதிலிருந்து அவற்றை அகற்றிவிடுதல் அவசியம்.

'கீழ்மை அகற்று' என்பது ஔவை மொழி.

நல்லொழுக்கம் என்பது நல்ல சிந்தனை, நல்ல பேச்சு, நற்செயல் இவை யாவும் ஒன்று சேர்ந்த குணவியல்பு. சிந்தனை வேறு, பேச்சு வேறு, செயல வேறாக இருத்தல் கூடாது. ஒழுக்கத்தை வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் பெரு நன்மை கிடைக்கும்.

**நாம் எதைப் படித்தாலும் - முறையாகக் கற்றால் - அது கடவுள் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்தும்.**
***கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழார் எனின்*** **- என்பது வள்ளுவர் வாக்கு.**
**கல்வியின் நோக்கம் ஒழுக்கமும் பண்பும் அடக்கமுமாயின் , அதன் பயன் கடவுள் வழிபாடு ஆகும்.**

### ஒழுக்கமும் பண்பும்

ஒழுக்கமும் பண்பும் மனிதருக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய குணவியல்புகள். ஒழுக்கமுள்ள இடத்தில் பண்பும் பண்புள்ளவிடத்தில் ஒழுக்கமும் இருக்கும்.

எமக்கு இருக்கவேண்டிய பண்புகளுள் அடக்கமுடைமை பிரதானமானது.' உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வாறே வாழ்விற்கு அடக்கம் இன்றியமையாதது. அடக்கமுடைமை என்பது மனம். வாக்கு (பேச்சு), காயம் (உடம்பு) ஆகியவற்றால் பிறரிடம் பணிவாக - அகம்பாவம் இன்றி - அடக்கமாக நடந்துகொள்ளும் பண்பாகும்.

## ஒவ்வொருவரும் ஒழுங்கு முறையினைக் கைக்கொண்டால் சகலருக்கும் செழிப்பு

நாம் பேசும் பேச்சு மிக முக்கியமானது. வீட்டிலும் சரி வெளியேயும் சரி எமது பேச்சின் பண்பிலேதான எமது வாழ்வு, வளம், மகிழ்ச்சி தங்கியுள்ளது.

'ஞயம்பட உரை' என்பது ஔவை மொழி.

தயவுசெய்து, நன்றி போன்ற வார்த்தைகள் தாராளமாக உபயோகப்படுத்தப்படல் வேண்டும். வா, போ, இரு என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக வாருங்கள், போய் வாருங்கள், இருங்கள் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தானாக வாயில் வரக்கூடியதாக நாவைப் பழக்கிக் கொள்ள வேண்டும்.

எமக்குக் கீழ்ப்பட்டோரிடத்தும் அமைதியாக அடக்கமாகப் பேசுதல் வேண்டும்.

'கீழோராயினும் தாழ உரை'
'வெட்டெனப் பேசேல்'
'சினந்து பேசேல்'
'கடிவது மற'
என்கிறார்ஔவையார்.

ஆசிரியருடன் வெட்டிப் பேசிய மாணவன் உயர்ந்ததில்லை. எவ்வளவு கெட்டிக்காரனாகவிருந்தாலும் படிக்கும் போது ஆசிரியர் ஆசிரியர் தான். மாணவன் மாணவன்தான்.

### ஒருவரைச் சந்திக்கச் செல்லும் போது....

நமது பேச்சிலே அடக்கம் இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரையோ அல்லது செயலகமொன்றில அதிகாரி ஒருவரையோ சந்திப்பதற்குச் செல்வதாக வைத்துக்கொள்வோம். அவரது செயற்கூடத்துள் அனுமதியின்றி நுழைந்து அவர் முன்நின்று நீங்கள் வந்த காரியத்தைக் கூற முறபடுவது பண்பான - அடக்கமான - செயலாக மாட்டாது. கூடத்து வாசலிலே நின்று "மன்னிக்கவும். உள்ளே வரலாமா" எனக் கேட்டுவிட்டு அவரது பதிலுக்காகக் காத்து நிற்றல்தான் பண்பு. அவ்வதிபர் அல்லது அதிகாரி வருமாறு அழைத்த பின்பு உட்பிரவேசிப்பதே பண்பு. காலணியை நிலத்தில் தேய்த்து ஒலியெழுப்பிக்கொண்டு நடத்தல் அடக்கமான பண்பாகமாட்டாது.

கதிரையில் அமருமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால் நன்றி தெரிவித்துவிட்டு, ஒலியெழுப்பாது கதிரையை நகர்த்திவிட்டு அமருதல் வேண்டும். ஒலியெழுப்பக்கூடிய முறையில் கதிரையை இழுத்தல் அடக்கமுடைய செயலாகமாட்டாது. அமர்ந்த பின்னர் உங்களுக்குச் சிறு பிரச்சினையொன்றிருப்பதாகக் கூறி அதைச் சுருககமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூற வேண்டும். எடுத்த எடுப்பிலேயே "உங்கள் கையொப்பம் வாங்க வந்துள்ளேன்" எனக் கூறுதல் பண்பாகாது.

பேசும்போது எம்முடைய கெட்டித்தனங்களைப் பற்றிப் பெரிதாகப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர்
**இ.குமாரவடிவேல்**
*விஞ்ஞான பீடாதிபதி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

---

# ஹாட்லியைக் கட்டி ஆண்ட பூரணத்தார் எனும் பெருந்தகை

சென்ற நூற்றாண்டில் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் வெற்றிகரமாகப் பாடசாலைகளை நடத்திய அதிபர்கள் வெகு சிலரே. அச்சிலரில் ஒருவர் தான் 1943 தொடக்கம் 1967 வரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராகவும் 1967 தொடக்கம் 1976 வரை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபராகவும் இருந்தவரும் 22-04-2001இல் தமது 91ஆவது வயதில் லண்டனில் காலமானவருமான உயர்திரு.க.பூரணம்பிள்ளை அவர்கள்.

நவீன ஹாட்லியின் சிற்பி எனப் போற்றப்படும் பூரணம்பிள்ளை அவர்கள் 'கேபி' எனவும் 'பூரணத்தார்' எனவும் செல்லமாக அழைக்கப்பட்டார். 'பூரணத்தார்' என்பது மாணவர் மீது ஒரு மந்திர சக்தியாகவே இயங்கிற்று.

ஒவ்வொரு மாணவனின் பெயரும் தகப்பன் பெயருடன் அவருக்குத் தெரியும். பத்துப் பதினைந்து வருடங்களின் பின்னரும் தனது பழைய மாணவர் ஒருவரைச் சந்திக்க நேரிடின் அவனின் பெயரை அச்சொட்டாக சொல்லக்கூடிய அசாதாரண திறன் அவரிடம் இருந்தது. ஒரு கல்லூரியின் மாணவர் தொகை 600க்கு மேற்படக்கூடாது எனும் 'பூரணத்தார் கோட்பாடே' அத்தகைய திறனுக்கு அடித்தளமாகும்.

## நீத்தார் நயப்புரை

பூரணத்தாரின் அழகான தோற்றம், கம்பீரமான நடை, ஆற்றொழுக்கின் அழகு காட்டும் ஆங்கில வளம், கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பன மாணவர்களை அவர் மீது பற்றும் பாசமும் கொள்ளச் செய்தன. எனினும் மாணவர்கள் அவரை 'நேசித்து மதித்தார்கள்' என்று சொல்லாது 'பயந்து மதித்தார்கள்' என்றே சொல்ல வேண்டும். ஆனால் அந்தப் 'பயம்' 'Six of the best' என்பதனாலோ 'Instant firing' என்பதனாலோ மட்டும் ஏற்பட்டதன்று. அக்காலகட்டத்தில் அயல் பாடசாலைகளில் அளிக்கப்பட்ட கொடுந் தண்டனைகளோடு ஒப்பிடின் பூரணத்தாரின் தண்டனைகள் அவ்வளவு ஒன்றும் பாரதூரமானவை அல்ல.

எனினும் மாணவர்கள் அவரைக் கண்டு பயந்தார்கள்; நேருக்கு நேர் சந்திக்கக் கூசினார்கள; அவர் தூரத்தில் வருவதைக் கண்டால் ஓடி ஒளித்தார்கள்; மதில் ஏறிக் குதித்தோடினார்கள் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும்.

பூரணத்தார் ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்லாது ஒரு மகத்தான ஒழுக்க சீலருமாவார். அவர் ஓர் உயர்ந்த மனிதர், அவரின் எதிர்பார்ப்புக்களும் உயர்ந்தனவாகவே இருந்தன. அவரின் எதிர்பார்ப்புகளுக்கு முகம் கொடுக்க முடியாத குற்ற உணர்வு (Feelings of guilt) மாணவர்களின் மனதில் ஒரு வித இனம் புரியாத, உளவியல் ரீதியிலான பயப்பிராந்தியத்தை உருவாக்கிவிட்டது என்பதே உண்மையாகும்.

அதிபர் என்பவர் பாடசாலையின் அரசன் என்பதை பூரணத்தார் பூரணமாக நம்பிச் செயற்பட்டார். ஹரோ பாடசாலையை தரிசித்த 6ஆம் ஜோர்ஜ மன்னரை அப்பாடசாலைத் தொப்பியை அணிந்தவாறே வரவேற்ற அதிபரை பத்திரிகைகள் தாக்கி எழுதியபோது அந்த அதிபர் 'மன்னர் ஜோர்ஜ பெரிய பிரித்தானியாவின் அரசர், இந்தியாவின் சக்கரவர்த்தி. ஆனால் நானோ ஹரோவின் அரசன்' எனக் கூறியதை பூரணத்தார் வாயிலாகவே நாம் கேட்டதுண்டு. அத்தகைய ஒரு 'நான்தான் அரசன்' என்னும் மனப்பாங்குதான் பூரணத்தாரையும் ஹாட்லியைக் கட்டி ஆள வைத்தது; ஹாட்லியை **Best all round school in Jaffna** என பிறரும் புகழவைத்தது.

கற்றலும் கற்பித்தலும் ஒருங்கே அமைதியான சூழ்நிலையில் நடைபெற வேண்டும் என்பது அவரின் கொள்கையாகும். பாடசாலையின் ஆரம்பத்திலும் மதிய இடைவேளையின் பின்னரும் 'அமைதி பேணும் நேரம்' என்பதொரு பிரதான அம்சமாகும். அந்தப் **Pin drop silence** மாணவர்கள் ஏகாக்ர சிந்தையடைய பெரிதும் உதவிற்று.

கற்றலும் கற்பித்தலும் வாரம் தோறும் அப்பியாசப் புத்தகங்களைப் பார்வையிடுவதன் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டது. அவரின் செறிவான மேற்பார்வையின் மிக நுணுக்கமான கண்காணிப்புமே மிகச் சிறப்பான அடைவைத் தந்தன.

மூளை வளர்ச்சியுடன் உடல் வளர்ச்சியும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும் என்பதும் அவரின் விருப்பமாகும். **'Mens sana in corpore sana'** என அடிக்கடி சொல்லிக்கொள்ளுவார். ஒரு மாணவனை மாணவத் தலைவனாக்குவதில் ஏனையவற்றுடன் விளையாட்டும் பிரதான பங்கு வகித்தது. விளையாட்டு ஒரு சிலருக்குத்தான் என்ற நியதி அன்று இருக்கவில்லை. தடகள விளையாட்டுப் போட்டிகளில் பலரின் பங்களிப்பு இல்லங்களின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வகையையும் அவர் அறிமுகப்படுத்தினார். புத்தகங்களைப் படிக்க விரும்பாதவர்கள் புத்தகங்களின் அட்டையையாகுதல் பார்க்க வேண்டும் என்று கூறிய அறிஞன் போன்று பூரணத்தாரும் தனது மாணவன் விளையாடாவிட்டாலும் விளையாட்டைப் பார்க்க வேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பானவராக இருந்தார்.



உயர் நிலை அடையக் கூடிய மாணவர்கள் பற்றியும் அவர் தெளிவானதோர் தூர நோக்கையும் கொண்டிருந்தார். ஒரு சிலர்தான் பல்கலைக் கழகம் செல்வார்கள்; அவர்களிலும் ஒரு சிலரே மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்வார்கள் எனினும் அந்த ஒரு சிலருக்குக் கூட 'தண்ணீரில் இருந்து வெளியே எடுத்து விடப்பட்ட மீனின் நிலை' ஏற்படக் கூடாது என்பது அவரின் எண்ணமாகும். அவ்வெண்ணத்தின் பிரதிபலிப்பே லோங்ஸ் போடவும், சப்பாத்து அணியவும், ரை கட்டவும், கரண்டி, முள்ளுக் கரண்டி, கத்தி என்பனவற்றை பாவிக்கவும் தந்த பயிற்சியாகும். 'High Table Dinner' போன்றவை வழக்கு ஒழிந்து போகாத நிலையில் ஒரு சிலருக்கேனும் கனவான்களாக நடந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்படும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அந்த உணர்வு வீண் போகவில்லை. பிற்காலத்தில் முள்ளுக் கரண்டி பிடிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்ட போது பலர் பூரணத்தாரின் Vision பற்றிப் போற்றிப் புகழ்ந்தார்கள் என்பதை நாம் அறிவோம்.

உயர்கல்வியை பல்கலைக்கழகத்தில்தான் பெறமுடியும் என்பதையும் பூரணத்தார் நம்பவில்லை. பல்கலைகழகப்படியை மிதியாதவர்களின் நூல்கள் பல்கலைக்கழகங்களில் பாடப் புத்தகங்களாக இருப்பதும் அவருக்குத் தெரியும். எனவே 'கல்வி' என்பதோடு 'அறிவு' என்பதையும் இணைத்தே பூரணத்தார் பார்த்தார். அறிவைப் பெறுவதற்கு வாசிப்புப் பழக்கம் அத்தியாவசியம் எனக் கண்ட அவர் அப்பழக்கத்தை மிகத் தீவிரமாகப் புகுத்தினார். பேக்கனின் **'Reading maketh a full man'** என்பது அவரின் தாரக மந்திரங்களில் ஒன்றாக இருந்தது. நூல் நிலையத்தில் இருந்து வாரந்தோறும் புத்தகங்களை இரவல் பெறாதவர்களை அவர் கண்டிக்கத் தவறவில்லை. அவர் வலிந்து புகுத்திய அந்த வாசிப்புப் பழக்கம் உயர் கல்வி என்னும் பஸ்ஸை தவற விட்ட பலரைக் கடைசி பஸ்ஸையும் தவற விடாதவாறு காப்பாற்றியுள்ளது.

பாடசாலையில் அளிக்கப்படும் கல்வியின் தரமும் அக்கல்வியினால் மாணவர்கள் அடையும் பயனும் அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பொறுத்தே அமைகின்றன. ஆசிரியம் என்பது ஒரு தனித்துவமான அமைப்பு. அதில் ஓர் அர்ப்பணம் உண்டு. எனவே அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களாலே உள்ளத்துறுதி, கடமையுணர்வு, சமுதாய நேயம்மிக்க மானிடராக தம்மாணவர்களை உருவாக்க முடியும் என்பது பூரணத்தாரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இதனால்தான் தனது ஆசிரியர்களில் ஐம்பது சதவீதத்தினர் ஹாட்லியின் பழைய மாணவர்களாக இருக்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இதனால் சகல ஆசிரியர்களும் சிறந்த சேவையை ஆற்றவும் அதிபர் ஆசிரியர் உறவு எப்பொழுதும் சுமுகமாக இருக்கவும் வழிவகுக்கப்பட்டது.

## பூரணம்பிள்ளைக்கு ஓர் அஞ்சலி

எமது மதிப்புக்கும் பேரன்புக்கும் உரிய அதிபர் பற்றிச் சிந்திக்கும் போது அவரின் சொற்பிரயோகம் சிலவற்றையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். **Duty first, Obey First, Comply and Complain, Rain is no excuse, Can dotch responsibility but can't dotch the consequences of irresponsibility** என்பன அழியா வரம் பெற்றனவாகும். எனினும் அரசியல் மயமாக்கப்பட்ட இன்றைய கல்வி உலகுக்கு இவை பொருத்தமற்றவையாகத்தான் தென்படும்.

பூரணத்தார் குற்றம் குறையில்லாத பாப்பாண்டவர் அல்லர். அவரிடம் ஒன்று இரண்டு என விரல் விட்டு எண்ணக் கூடிய சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். To err is human என்பதை அவர் வாயிலாகவே நாம் முதன்முதலாகக் கேட்டதுண்டு. எனினும் அவர் குணம் என்னும் குன்றேறி நின்றவர்; குறுகிய சுயநல நோக்குக்கு அப்பாற்பட்டவர்; கல்லூரி ஒழுங்கை மீறிய தன்து செல்ல மகனையே ஹாட்லியிலிருந்து நீக்கி மனு நீதிச் சோழனை நினைவூட்டியவர்; சாதி கோலோச்சிய அந்தக் காலத்தில் அச்சிறுமைக்கு இடங் கொடாதவர்; இந்து, கிறிஸ்தவர் என்ற ரீதியில் எந்தவிதமான சலுகையும் காட்டாதவர்; அதே நேரம் ஹாட்லி ஒரு கிறிஸ்தவ பாடசாலை என்பதையும் மறவாதவர். அன்று திருநீற்றுக்கும் சந்தனத்துக்கும் இடம் இருக்கவில்லை; தேவாரம் படிப்பிக்கப்படவுமில்லை; பாடப்படவுமில்லை.

**சி.இரத்தினம்**
*பழைய மாணவன், முன்னாள் ஆசிரியர்.*

பூரணத்தார் பற்றி பலர் பல சந்தர்ப்பங்களில் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள் எனினும் அவற்றுள் சாலப் பொருததமாக அமைந்தது வித்துவான் க.ந. வேலன் அவர்களின் "மலை நிகர் மாண்பு, கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை, ஆசிரியருக்குரிய புற உள் ஆளுமைகள் முற்றும் பூரணமாயமைந்த ஆனால் பிள்ளையுள்ளங் கொண்ட அந்த மனிதன்தான் ஹாட்லிக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிதான் பூரணம்பிள்ளை" என்பதாகும்.

வித்துவான் குறிப்பிட்ட 'பிள்ளை உள்ளம்' பூரணத்தார் மாணவ தலைவர்களுக்கு வருட இறுதியில் கொடுக்கும் "அதிபரின் தேநீர் விருந்தில்" துள்ளி விளையாடுவதைக் கண்டவர்கள் அவரின் கண்டிப்பு, கோபம், அடி எல்லாம் தேவைகருதி மேற்கொள்ளப்பட்டவை என்பதையும் அவரின் உடலில் ஓர் இனிமையான, அன்பான, சேவைக்கான ஆத்மா குடிகொண்டிருந்தது என்பதையும் அறிவார்கள்.

அந்த ஆத்மா இன்று உடலை விட்டுப்பிரிந்துவிட்டது. பூதவுடல் கனிந்த கனியாக விழுந்துவிட்டது. அந்தப் பூதவுடலுக்கு எம்மால் இறுதி மரியாதை செலுத்த முடியாமல் போய்விட்டது. இருப்பினும் பழைய நினைவு என்னும் பாதையிலே சென்று அவரை நினைவு கூருவோம். இதுவே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகுக.

*'வளர்ந்து கற்ற நாம்*
*என்றும் நின்வழி நிற்போம்.'*

உ

குப்பிளான் கேணியடி ஞான வைரவர் கோயில்

**பாலஸ்தாபன**
**கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

மேற்படி திருக்கோயிலில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலை 6.30 மணி - கர்மாரம்பம் - பூர்வாங்கக் கிரியைகள்
முற்பகல் 11.30 மணி - பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

அடியவர்கள் அனைவரும் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஆலய குரு: கிரியாகலாபமணி
ஸ்ரீலஸ்ரீ சி.கிருஷ்ணசாமிக்குருக்கள்

(89078) ~ ஆலய பரிபாலனசபை.



**மூன்றாம் மாத நினைவஞ்சலி**

மலர்வு
09 - 04 - 1983



உதிர்வு
19 - 03 - 2001

**முத்துக்குமாரு சுந்தர்ராஜ்**
(பருத்தித்துறை)

**திதி:- 16-06-2001**

எங்கள் அருமைச் செல்வமே! சுந்தா! நாங்கள் எண்ணிய எண்ணம் எங்கே? உன் புன்னகை எங்கே? கனிவான வார்த்தை எங்கே? கடைக் குட்டியாக வந்து பாசத்தை வளர்த்தாயடா! உன் கள்ளமில்லாச் சிரிப்பால் கவலைகளை மறக்க வைத்தாயடா! அன்புச் சகோதரங்களைத் தவிக்கவிட்டு நீ எங்கு சென்றாய் சுந்தா?

எதிர்காலம் தேடி நீ
எத்தனை கனவுகளோடு
கப்பல் ஏறிச் சென்றிருப்பாய்!
இங்கிலாந்து நாட்டின்
அண்ணன் அரவணைப்பில்
அமைதியான வாழ்வுக்காய்
பறந்து சென்றாயோ?
அத்தனையும் பெற்ற மனம்
பித்தாகி வெம்பி அழ
ஆசைத் தம்பியைப் பிரிந்த
ஆறு சகோதரிகளும் கதறிஅழ
உன் வருகைக்காகக் காத்திருந்த
அண்ணன் அண்ணியை
மழலைகளுடன் அலறவிட்டு
நீ மட்டும் தனியாகப் பிரிந்ததேனோ?

*உன் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திப்போம்!*

*கணயன் தோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

பெற்றோர்
சகோதர சகோதரிகள்.

(89086)



**இதய அஞ்சலி**

எமது கல்வி நிறுவன தாவரவியல் ஆசிரியர்
**திரு.V.S.குணசீலன்** அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி**
*(ஓய்வு பெற்ற அதிபர், கரவெட்டி)*

**அவர்களின் திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கன்னாதிட்டி,*
*யாழ்ப்பாணம்.*

(89089)

NEW SCIENCE HALL,
NEW SCIENCE COLLEGE
குடும்பம்.


# சிறப்புத் தரும் ஒழுக்க...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசிக்கொண்டிருப்பது பண்பாகாது. "வல்லமை பேசேல்"என்ற வாக்கை மனதில் வைத்திருக்க வேண்டும்.

நாம் பேசும்போது மிகவும் அவதானமாகப் பேசுதல் வேண்டும். பிழையான தகவல்களை முன்வைத்தல், பயனற்ற பேச்சுப்பேசிக் கேட்போரது காலத்தை வீணடித்தல், தேவைக்கு அதிகமாகப் பேசுதல் என்பவையும் அடக்கமான செயற்பாடுகள் அல்ல.

*யாகாவாராயினும் நாகாக்க*
*காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு.*

என்கிறார் திருவள்ளுவர்.

பணிவாக - அடக்கமாக - நடப்பதனால் எமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையை - உயர்வை - புலப்படுத்தும். காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரத்தினது கிளைகள் தாழ்ந்து இருக்கும். பொத்தி வெளிவந்த வாழை தலைசாய்த்து நிற்கும். கனி அற்ற கிளைகளும் பொத்தி வராத வாழையும் நிமிர்ந்து நிற்கும். தாழ்ந்த கிளைக்கும் தலை சாய்ந்த வாழைக்கும் தான் பெருமை.

*எல்லார்க்கும் நன்றாம் பணிதல்*
*அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வந் தகைத்து*

என்பது வள்ளுவர் வாக்கு.

நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். நேரம் பொன்னானது. இழந்த நேரத்தை மீண்டும் பெற முடியாது. எமது நேரத்தைப் பாழாக்குவதுடன் மற்றவர்களது நேரத்தையும் பாழாக்குவதாக எமது செயற்பாடுகள் அமைந்துவிடக் கூடாது.

## ஒழுங்கு முறைகள்

எமது வாழ்வின் மேம்பாட்டிற்காக, எமது செயற்பாடுகள் சீராக நடைபெறுவதற்காக பல ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து வைத்திருப்பதும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதும் அவசியம். அவற்றை மீறி நடத்தல் பண்பற்ற செயல். நாம் எமது செயற்பாடுகளை ஓர் ஒழுங்கு முறையில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு இறைவனே வழிகாட்டியிருக்கிறான்.

இப்பிரபஞ்சமே ஓர் ஒழுங்கு முறையில் தான் இயங்குகிறது. சூரியனைப் பூமி ஒழுங்காக வலம் வருவதால்தான் பருவகாலங்கள் ஒழுங்கு முறையில் ஏற்படுகின்றன. புவி தன்னைத்தானே ஒழுங்கு முறையில் சுற்றுவதனால்தான் இரவும் பகலும் ஒழுங்காக ஏற்படுகின்றன. சூரியத் தொகுதியின் கோள்கள், அவை சுற்றும் பாதை, அவற்றின் வேகம் யாவுமே ஓர் ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. நட்சத்திரங்களும் அவ்வாறே. இவ்வாறான ஒழுங்குமுறை இல்லாதிருந்தால் இப்பிரபஞ்சத்திற்கு என்ன நடந்திருக்குமெனக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாதுள்ளது.

இப்பிரபஞ்சம், குறித்த விதிமுறைகளுக்கமைய ஓர் ஒழுங்கில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது விஞ்ஞானத்தின் அடிப்படை. சைவசித்தாந்தத்தின் அடிப்படையும் அதுவே.

மனிதனும் தனது செயற்பாடுகளை ஓர் ஒழுங்கு முறையில் அமைத்தால் மட்டுமே எல்லோருடைய வாழ்வும் செழிப்புறும் - ஒருவரால் ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதிருக்கும் - என்பதை உணர்ந்து கொண்டதால், குடும்ப வாழ்க்கை முறை முதல் நாட்டின் நிர்வாகம் வரை யாவற்றிலும் ஒழுங்குமுறையைப் பேண விதிகளை ஏற்படுத்திக் கொண்டான். இவற்றுள் ஒன்று வீதி ஒழுங்கு விதிகள்.

வீதி ஒழுங்கு விதிகளை நாம் கடைப்பிடிக்காவிடின் எமக்கும் ஏனையோருக்கும் இடைஞ்சல் ஏற்படுவதுடன் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் , அங்க இழப்புக்கள் ஏற்படும்.

வீதி ஒழுங்குகள் போலவே சமுதாயத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும் , எதிர்ப்பாலாருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் , மக்கள் கூடும் பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேணடும் என்பதற்கான விதிமுறைகள் உண்டு. சுதந்திரம் என்பது ஏனையோருக்கு இடைஞ்சலாக நடந்துகொள்வதற்கான உரிமம் அல்ல என்பதை மனதில் ஆழமாகப் பதித்துக்கொள்ள வேண்டும்.

ஓர் சமூகம் நாகரிகமடைந்ததா அல்லவா என்பது அவர்கள் எவ்வளவுக்கு ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்கிறார்கள் என்பதனாற்றான் தீர்மானிக்கப்படுகிறது. ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடவாமை ஒழுக்கமற்ற, பண்பற்ற செயற்பாடுகள்.

நாம் எதைப்படித்தாலும் - முறையாகக் கற்றால் - அது கடவுள் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்தும்.

*கற்றதனால் ஆய பயன் என்*
*கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழார் எனின்*

என்பது வள்ளுவர் வாக்கு. கல்வியின் நோக்கம் ஒழுக்கமும் பண்பும் அடக்கமுமாயின் , அதன் பயன் கடவுள் வழிபாடு ஆகும்.

சைவசமயிகளாகப் பிறப்பதற்கு நாம் கொடுத்து வைத்தவர்கள். சைவசமயம் ஒரு வாழ்க்கை நெறி. அவ்வாழ்க்கை நெறிக்கு அடிப்படை ஒழுக்கம் , பண்பு , கல்வி , கடவுள் வழிபாடு ஆகியன உண்டு. கடவுள் வழிபாடு என்பது கோவிலில் போய் இறை சந்நிதிமுன் நின்றோ சுவாமிப் படங்களுக்கு முன் நின்றோ விபூதி தரித்துக் கைகூப்பிவிட்டுப் பிச்சைக்காரனைப்போல படிப்புத்தா, காசுதா, காணிதா, வீடுதா, பகையைத் தீர், நோயைத் தீர் என்று இரப்பதல்ல. அன்பாகத் துதித்துப் போற்றுதலே இறை வழிபாடு. இவற்றிற்குத் துணை நிற்பவை சிவனடியார்கள் சரித்திரங்களும் திருமுறைகளுமாகும். திருமுறைகளைப் பண்ணோடு ஓதப் பயில வேண்டும். சைவ பரிபாலன சபை போன்ற நிறுவனங்கள் நடத்தும் பண்ணிசை வகுப்புகளிலும், அறநெறி வகுப்புகளிலும் மாணவர்கள் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும். இதனைப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். நாவலர் பெருமானின் சைவ வினாவிடை போன்ற சமய நூல்களும் நீதி நூல்களும் நீதிக்கதைகளைக் கொண்ட புத்தகங்களும் ஒவ்வொரு வீட்டிலும் இருத்தல் அவசியம். இவற்றைச் சைவ பரிபாலன சபை போன்ற நிறுவனங்கள் பதிப்பித்து பாடசாலை மாணவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

ஆலய வழிபாடு சமய உணர்வு ஏற்படுதற்கான முதற்படி. ஆலய வழிபாடு என்பது, அங்கு சென்று அருச்சனைக்குப் பூசகரிடம் ஒழுங்கு செய்துவிட்டு, அவர் அர்ச்சிக்கும் போது வேறு பராக்குகள் பார்த்துவிட்டு, பின்னர் விபூதி பிரசாதம் வாங்கி அணிந்து கொண்டு வீடு திரும்புவது அல்ல. பூசகர் அர்ச்சிக்கும் போது நாமும் இறை நாமத்தை ஓதி வழிபடல் வேண்டும், ஓரிடத்தில் அமைதியாக இருந்து திருமுறை ஓதித் தியானம் செய்தல் வேண்டும்.

கோயில் விழாக்கள் பெரும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை விளையாட்டுக்குரிய நிகழ்வுகளாக்கக்கூடாது. கோயில் விழாக்களின் போது வீதிகளில் கூடி நின்று அரட்டையடித்தல், வீண் வார்த்தை பேசுதல் ,வழிபட வருவோருக்கு இடைஞ்சலாக நடந்துகொள்ளல், பிரசாதத்தை வீதிகளில் நின்றுகொண்டு கொட்டிச்சிந்தி உட் கொளளல், தேங்காய் உடைத்தலையும் தீர்த்தமாடுதலையும் வேடிக்கை விளையாட்டாக்குதல் போன்ற செயற்பாடுகள் கற்றவர்கள் செய்யக்கூடிய ஒழுக்கமுடைய, பண்பாடுள்ள, நாகரிகமான செயல்கள் அல்ல. இவ்வாறு நடந்துகொள்பவர்கள் பெருமைப்பட எதுவுமில்லை. இவை பற்றி சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பெற்றோர்கள் இவைபற்றி வீடுகளில் பிள்ளைகளுடன் கூடியிருந்து அன்னியோன்னியமும் அரவணைப்பும் மிக்க சூழ்நிலையில், கலந்துரையாடினால் நல்ல பலன் கிடைக்கும். கண்டிப்பதாலோ ஆணையிடுவதாலோ சாதிக்க முடியாதவற்றை சிறுவயதிலே அரவணைப்புடன் கூடிய கலந்துரையாடலால் சாதிக்க முடியும். இது பிள்ளை குழப்படிகாரனாக வந்த பின்பு செய்யக்கூடிய காரியமுமல்ல என்பதைப் பெற்றோர்கள் கவனத்திற் கொள்வது நல்லது. இது தொட்டிலிலேயே தொடங்கவேண்டிய விடயம். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

ஒழுக்கமும் பண்பும் அறிவும் நிறைந்தவனே உத்தமன். உத்தமர்கள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள் , பெற்றோர்கள், சமுதாயத் தலைவர்கள் முழுமூச்சுடன் செயற்பட வேண்டியது இன்றைய அவசரத் தேவைகளுள் ஒன்று.

(முற்றும்) ★


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள்
விரிவுரையாளரும்எனதுநண்பனுமாகிய
**திரு.ந.யோகராஜன்**
J.P. (ALL ISLAND)
B.A, P.G. Din . in Edu. & DIN in Tech. Edu.

**அவர்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பிராந்திய பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு அவர் மேலும் பல சிறப்புகள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என அவர்களையும் அவர் தம் குடும்பத்தினரையும் பராட்டி வாழ்த்துபவர்கள்:-**

*வெடியரசன் வீதி,*
*காரைநகர்.*

**தற்காலிக முகவரி:**
*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

செல்லையா துரைராசா
குடும்பத்தினர்.

(89087)



**அமரர் தோழர் க.நவரத்தினம்**
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)
அவர்களின்

**நினைவு அஞ்சலிக் கூட்டம்**

இடம்:- சிற்றி மண்டபம்
காலம்:- நாளை (17-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி
தலைவர்:- திரு. சி. இராசையா (ஓய்வு பெற்ற தபாலதிபர்)

அஞ்சலி உரை நிகழ்த்துபவர்கள்:

1. திரு. வே. சிவராஜா (முன்னாள் தலைவர், இலங்கை ஆசிரியர் சங்கம்)
2. திரு. S. தவராஜா (வடமாகாண தொழிற்சங்க கூட்டுக்குழுத் தலைவர்)
3. திரு. நா. சிவபாதம்(புத்தொளி, ஓய்வுபெற்ற அதிபர்)
4. திரு. S. சிவபாலன் (வங்கி ஊழியர்சங்கம்)
5. திரு. க. திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்)
6. திரு. க. தங்கவடிவேல் (மதிப்பீட்டுத் திணைக்களம்)
7. திரு. E. மயில்வாகனம் (தபால் ஊழியர் சங்கம்)
8. திரு. பொ. கதிர்காமநாதன் (தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்)

மற்றும் பல தொழிற்சங்கத் தலைவர்களும், நண்பர்களும் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

✸ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ✸

(89090)

தோழர்கள், நண்பர்கள்,
அனுதாபிகள்.

# இந்த வார இராசி பலன்

## 17-6-2001 - 23-6-2001

| | | | |
|---|---|---|---|
| | செ சந் | புத சனி | சூ வி ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| செ கேது | | | |

### மாற்றம்

**17-06-2001 இல் அச்சுவினி - மேடம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

அரசியலில் பேச்சுவார்த்தைக்கு இருதரப்பினரும் ஆயத்தமாவார்கள். உலக நாடுகள் ஐ. நா. சபை புதிய அழுத்தங்களை கொடுக்கும். மாற்றங்கள் ஏற்படும். பேச்சுக்கள் தொடரும். கலகங்களும் வர இடமுண்டு. இனவாதப் போக்கு பதற்றத்தை ஏற்படுத்தும். அமைதி பேண மக்கள் இறைவனைப் பிரார்த்திப்பர். இந்தியாவின் போக்கில் மாற்றம். பாகிஸ்தானுடன் பேச்சு; வடக்கே பதற்றம். மேற்கு நாடுகள் தொடர்ந்து கிழக்கு - மத்திய கிழக்கு நாடுகளில் தமது பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்கும். பசுபிக், இந்துசமுத்திர பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மகாதேவா ஜோதிடம்

### மேடம்

நம்பிக்கை ஒளி யாரிடம் உள்ளது என்ற சிந்தனை மக்களிடம் வந்துவிட்டால் உண்மைகளைத் தேடி ஓடி வருவார்கள். தொழில் ஸ்தானத்தில் எவரது ஆலோசனையையும் ஏற்கமாட்டீர்கள். காரியனுகூலத்துடன் செயற்படுங்கள். இலாபம் இல்லாத இடத்தில் ஏன் கருத்தைச் செலுத்துகிறீர்கள். பொருள் வரவு, புதிய செலவுகள், சகோதரங்களுக்கு நன்மைகள், வீடு — வாகன வசதிகள் என்பன கொடுக்கும். வயிற்றுநோ, வாய்வு, உஷ்ண பீடைகள், கண்கூச்சம் என்பன கொடுக்கும். உணவுத்துறை, இசைத்துறை கொம்பியூட்டர்துறை, பிரயாணத்துறை குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள் வெள்ளி.

### இடபம்

உண்மைகள் வெளிவந்ததும் பொய்யர்கள் தானாக ஓடி மறைவர். தொழில் ஸ்தானத்தில் பல படபடப்புக்கள் தோன்றி மறையும். அரச உதவிகள், இடாம்பீகச் செலவுகள். தாய்வழிப் பேச்சு, தெய்வீக இடங்களுக்குப் போய்வருதல், குடும்பத்தில் கருத்து வேற்றுமை என்பன வரும். நாரிநோ, நெஞ்சுப் படபடப்பு இருக்கும். இடமாற்றம், புதிய நண்பர் வரவு என்பன நடக்கும். சட்டநடவடிக்கை பாதுகாப்புப்பகுதி, மருந்து, இரும்புத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். தூர இடங்களிலிருந்து புதிய செய்திகள் வரும்.

★ அதிர்ஷ்டநாள்:- வெள்ளி.

### மிதுனம்

ஒருவரை ஒருவர் கொச்சைப்படுத்துவதனால் யாருக்கு இலாபம்? தொழிலில் பொருள்வரவு, பெரியவர்கள் பல உதவிகளைச் செய்து தருவார்கள். இடைக்கிடை மனப்பயம், சஞ்சலப் போக்கு இருக்கும். கோயில் குளம் என ஓடுவீர்கள். புத்திரர் அல்லது சகோதரர் சிறப்பு அடைவர். பிறருக்கு ஆலோசனை, அரச உதவி என்பன கிடைக்கும். விஷபீடைகள். தலைவலி, களைப்பு கொடுக்கும். செய்தித்துறை, குருத்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி (மத்தியான நேரம்).

### கடகம்

உயர் பீடங்களில் திருடரும் பொய்யரும் இருப்பதனால் தான் பல நல்ல உழைப்பாளிகள் வெளியேற்றப்படுகின்றார்கள். அதனால் இச் சமுதாயம் பல இழப்புக்களை அடைகின்றது. தொழில் ஸ்தானத்தில் சில சம்பவங்கள் நடக்கும். குடும்பத்தில் சகோதரங்களிடையே அபிப்பிராயப் பேதங்கள் வரும். பயம், படபடப்பு, நாரிநோ விறைப்பு என்பன வரும். அரசியல்துறை, செய்தித்துறை, எழுத்துத்துறை, பாதுகாப்பு பகுதி போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி.

### சிங்கம்

உண்மை தான் – சத்திய வாக்கு உயர்வுதரும். பலருக்கு நன்மைதரும். பெரியவர்களாவதற்கும் உயர் பீடங்களில் உறுதியான நடவடிக்கைகளுக்கும் உண்மை மிக முக்கியம். தொழில் ஸ்தானத்தில் டல சம்பவங்கள் நடக்லாம். பலர் உங்களைப்பற்றி பலவிதமாகப் பேசலாம். ஆனால் நீங்கள் உறுதியுடன், உண்மைப்படி நடந்து வெற்றி அடைவீர்கள். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். கைகால் உளைவு, சலவருத்தம், தலையிடி, பித்தவருத்தம் என்பனவரும். தேசிக்காய் பாவித்தால் நன்று. மருந்துத்துறை, வியாபாரத்துறை. குருத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் பல நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- சனி.

### கன்னி

காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளுங்கள். சந்தர்ப்பங்கள் பலரை உத்தமர்களாக்கி உள்ளது. இடமாற்றமொன்று நிலைமாறிவருகின்றது. நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும். எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள். காணி பூமிப் பேச்சு, மனக்கருத்து. பெரியவர்களின் உதவிகள், சிறுபிரயாணங்கள். தூரத்துச் செய்திகள் என்பன வர இடமுண்டு. சளி, வாத உளைவு, மூலவருத்தம், கிருமித்தாக்கம் என்பனவரும். பிரயாணத்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், சனி, வெள்ளி.

### துலாம்

சட்டத்தை மீறிக் களவுகள் செய்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடாது. சட்டத்திற்கு மாறாக நடப்பவர்கள் சாட்சியில்லாமல் தண்டனை பெறாமல் தப்பிவிடலாம். ஆனால் தர்மம் அவர்களை சும்மாவிடாது. துரத்தியபடி இருக்கும். இந்த அனுபவம் உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் ஏற்படும். பெரியவர்கள் உதவுவார்கள். சகோதரங்கள் நன்மை அடைவார்கள். மருந்துத்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

அட்டத்தில் வியாழன் வைத்தியச் செலவுகளைக் கூட்டித் தரும். ஆயினும் பொருள் வரவுகளும் இடமாற்றங்களும் சுபசம்பவங்களும்கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில்செலவுகள் அதிகரிக்கும். பதற்ற நிலைவரும். சிலர் கோள்கள் சொல்லுவார்கள். மகிழ்ச்சிகரமான செய்திகள் வரும். பெரியவர்கள் உதவுவார்கள். கைகால்விறைப்பு, கிருமித் தாக்கம், சிரசு - கண் வருத்தங்கள் வரும். வைத்திய உதவிகள் கிடைக்கும். செய்தித்துறை, குருத்துறை, போக்குவரத்துத்துறை, நீதித்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வெள்ளி, சனி.

### தனுசு

உங்களின் நேர்ப்பாதையில் எப்பொழுதும் சலசலப்புத்தான். அடிப்பதுவும் அணைப்பதுவும் உங்கள் கைதான். பலரை வாழவைத்து, ஆலோசனை கொடுத்து பல நன்மைகளைச் செய்வீர்கள். காணிபூமி, வாகனச் சிறப்பு, பணவரவு, புதிய புடைவை அல்லது பொருள் வரவு, சகோதரர், புத்திரர் பற்றிய செய்தி வரவு என்பன ஏற்படும். வயிற்றுநோ, கால் விறைப்பு, குடல் வருத்தம், உஷ்ணபீடைகள் என்பன வரும். புதிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். சட்டத்துறை, கோயில்துறை, பாதுகாப்புத்துறை, ஹோட்டல்துறை போன்ற துறையினர் பல நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி, சனி.

### மகரம்

குறுகிய எண்ணம் குறுக்கு வழிகள் - அற்ப்பத்தனத்தைத் தரும். பதற்றப்படாமல் செயற்பட்டபடி இருங்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் யல உதவிகள் கிடைக்கும். புதிய நண்பர் உதவுவார்கள். தூர இடங்களிலிருந்து செய்திகள் வரும். நரம்புப்பிடிப்பு, மனக் குழப்பம், கைகால் பிடிப்பு, தலைவலி என்பன வரும். பொருள் களவு போகலாம். கவனமாக இருக்கவும். செய்தித்துறை' நிர்வாகத்துறை, சந்தைத்துறை' குருத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி, சனி.

### கும்பம்

வாழவேண்டுமாயின் துணிவுடன் செயற்படவேண்டும். எத்தனையோ துன்பங்கள், பேச்சுக்கள், பொறாமைகள் அத்தனையும் தாண்ட வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் வரும். என்ன அதிக யோசனை? கையில் கிடைத்ததை பையில் போட்டுக்கொள்ளுங்கள். அல்லது விரயம்தான். எதிர்ப்பாலாருடன் கலகங்கள் வரலாம். தொண்டை வரட்சி, கால்வீக்கம், நாரிஉழைவு, படபடப்பு என்பன வரும். அரசியல்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.

### மீனம்

எல்லோருடனும் அன்பாக இருக்க சாதக சூழ்நிலை ஏற்படும். பல பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் பணவரவு அதிகரிக்கும். நன்மை தீமை கலந்து நடக்கும். இடமாற்றங்கள் ஏற்படும் கொடுக்கல் வாங்கலில் பகைமை வரலாம். தூரத்துச் செய்திகளால் பதற்றம் வரும். எதிரிகள் ஓடி ஒழிப்பர். குடல் வருத்தம், சளித் தொல்லை, உஷ்ண பீடைகள், இரத்த வருத்தங்கள் என்பன வரும். நீதித்துறை, வியாபாரத்துறை, மருந்துத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு. திங்கள், சனி.

## சமய சந்நிதிகளில்

காரைநகர், ஜூன் 16

காரைநகர் கருங்காலி-கேசடை பெரியதம்பிரான் ஆலய வருடாந்த உயர் பொங்கல் பக்திப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி முதல் நடைபெற உள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகள், அடியார்களின் பொங்கல் மடை நிகழ்வு, அக்கினிப்பிரவேசம்(தீமிதிப்பு) மகேஸ்வரபூசை ஆகியனவும் இடம்பெறும். (க-73)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும், மறுநாளான 27ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறுவதுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும். (க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 16

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வாராந்தம் நடைபெற்று வருகின்ற திவ்யப் பிரபந்தவுரையில் இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு 'ஆழ்வார்கள் மகிமை' என்னும்பொருளில் சைவப் புலவர் கா. கமலநாதன் உரையாற்றவுள்ளார். (3-10)

★ ★ ★

வண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ஆனி உத்தர மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா 26 ஆம் திகதி காலை 9மணிக்கும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குருவும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவருமாகிய

கிரியாகலாப முக்தாமணி

சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள்

அவர்கள் சர்வதேச இந்துமத 'குருபீடாதிபதி'யாகத் தெரிவு செய்யப்பட்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்து மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்தம் குடும்பத்துடன் சகல செல்வங்களும் பெற்று நீண்ட காலம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல அருள்மிகு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க அவர் சேவைகள்

கு. கணேசதாசன் J. P.
குடும்பத்தினர்.
விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர்,
மானிப்பாய்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(89108)

வலி. கிழக்கு தென்பகுதி
ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

வழங்கலுக்கான
கேள்வி அறிவித்தல்

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்திற்கு உணவுப் பொருள்களையும் ஏனைய பாவனைப் பொருள்களையும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் 2001 - 06 – 28 ஆம் திகதி முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பொருள்களின் விவரங்கள் கேள்வி அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்களை அலுவலக நாள்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை சங்கத்தில் மீளளிக்கப்படாத படிவப் பணமாக ரூபா 250/- ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

— பொது முகாமையாளர்

நீர்வேலி,
2001 - 06 - 15

(சி/17113)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இன்று வியாழ மாற்றம்

இலங்கை திருக்கணித பஞ்சாங்கப் படி இன்று வியாழ மாற்றம். வாக்கியப் படி 13.06.2001இல் வியாழ மாற்றம் எல்லா ராசிப் பலன்களுக்கும் ஒரே பிரதி, புத்தம்புதிய வெளியீடு ரூ.10/= சத்யா, 3ஆம் மைல், ஆனைக் கோட்டை. **T.P. 021-2753.** (89045)

## உடன் விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்கு உகந்த மேசைகள், அலுவலக மேசை, கட்டில்கள், கதிரைகள், அலுமாரி, **Steel cupboard, singer** குளிர்சாதனப் பெட்டி **Piram** (சிறுவர் தள்ளுவண்டில்) மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- **15/1**, ஓடைலேன், வண்ணார்பண்ணை. (89002)

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் (வெளிநாட்டு, உள்நாட்டு) மணமக்கள உண்டு. குறிப்புக்கள் சனி, ஞாயிறுகளில் உடனுக்குடன் பார்த்துக் கொடுக கப்படும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (89083)

## O/L கணிதம்

புதிய பழைய பாடத்திட்டத்தில் **Distinction, Credit** பெறுபேறடைய ஆண்டு 6-10 வரையும் ஆரம்பத்திலிருந்து (**Paper Class** வரை) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (89050)

## O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும். கடிதத் தொடர்பும் கொள்ளலாம். க.ஆறுமுகநாதன், 10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (88948)

## இறைச்சிக்கோழி விற்பனை

**Broiler, Cullbirds, Cockerels, Soup** குஞ்சு, இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00; குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச சந்தையடி, நல்லூர். (88968)

புறொயிலர், சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88836)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய கனடாவில் பெற்றோருடன் நிரந்தரமாக வசிக்கும் புநர்பூசம் 4ஆம் பாதம் 7இல் செவ்வாய் மணமகனுக்கு மணமகளையும், இங்கு பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றும் 31 வயதுடைய ரேவதி நட்சத்திரம் 7இல் செவவாய் மணமகளுக்கு மணமகனையும உறவினர் தேடுகின்றனர். தொடர்பு: 115/1 அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (89034)

## திருமண நிலையம்

எண் சோதிட முறைப்படி உங்கள ஆங்கிலப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமான மணமகன், மணமகளைத் தெரிவு செய்து திருமணம் முடித்து வைப்போம். திருமணமாகாத ஆண், பெண் இருபாலரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: எண்கலை ஆசான், சி.சி.கே.ஸ்ரீராஜ ராஜேஸ்வரன், வித்தனை வீதி, வல்வெட்டித்துறை. (89071)

## தவறிவிட்டது

கல்வியங்காட்டுச் சந்திக்கும் முதிரைச்சந்திக்கும் இடையிலான பருத்தித்துறை வீதியில் ஒரு தொகைப் பணம் 13.06.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சந்துரு, **Tele Com**, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். **T.P.2923.** சன்மானம் வழங்கப்படும். (89061)

நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த யசோதா சிவசுப்பிரமணியம் என்பவரது விசேட அ.அட்டை (இல. 0906014753), தேசிய அ.அட்டை (இல. 458391947V), திறப்புக் கோர்வை என்பன தாவடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (89084)

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட 200 - இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள ஆட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 265, மானிப்பாய வீதி, யாழ்ப்பாணம். (89073)

45 நாள்கள் நிரம்பிய அல்ஷேசன நாய்க்குட்டிகள் (ஆண், பெண்) உடன விற்பனைக்குண்டு. தொடர்பு:- குணரதினம், மடத்தடி, கந்தரோடை, சுன்னாகம். (89063)

**CABLE LINE** தொலைபேசி இணைப்பு (கண்ணாடி **Booth**) 2 தொலைபேசிகள் மற்றும் இதர பொருள்களுடன் விற்பனைக்குண்டு. இன்று (ஞாயிறு) மட்டும் சந்திக்கலாம். தொடர்பு: றோகான்ராஜ் **No.35,** சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (89065)

ஆலய பாவனைக்கு உகந்த (இந்தியத் தயாரிப்பான) புதிய பெரிய கோண் ஸ்பீக்கர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:மயூரன், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. (89088)

நல்ல நிலையிலுள்ள (கடைக்குத் தேவையான) 6 அடி நீளம், **31/2** அடி உயரம், 3 தட்டுக்கொண்ட சோக் கேஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 103, கோயில் வீதி, **I.C.R.C.** சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (89042)

நல்ல நிலையிலுள்ள **10H.P** மாருதி டீசல் எஞ்சின் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு த.பரராஜசிங்கம், காமாட்சியம்பாள் கோயிலடி, நீர்வேலி. (89041)

## புறொயிலர் இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழிகள விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (89075)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். 310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (**S.M.** பர்ணான்டோ கண்ணாடிக் கடை அருகில்) **T.P.3170** (89068)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத், 40,விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்) (89077)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய எம்.பி.பி.எஸ் டாக்டருக்கு மணமகள் தேவை. மணமகள் அழகானவராகவும் அடக்கமானவராகவும் குடும்பப்பாங்கானவராகவும் இருத்தல் அவசியம். புகைப் படம், சாதகக் குறிப்பு மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்பு:- விள.இல. 1301, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம். (88846)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975.08.07 இல் பிறந்த ஆயிலியம் முதலாம் கால் 8இல் செவ்வாய், 28 பாவம் உள்ள ஆஸ்திரேலியாவில நிரந்தர வதிவிடப் பிரஜா உரிமை பெற்றுள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர், விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1306, மே/பா.உதயன். (89005)

---

# கரங்கூப்பி நன்றி நவில்கின்றோம்

## அமரர் ஸ்ரீநிதி கபில்

**தொண்டமனாறு செல்வச் சந்நிதிக் கடலில் (10-06-2001) அகால மரணமான எமது அன்பு மகன்**

**ஸ்ரீநிதி கபில்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு, கடலிலிருந்து பூதவுடலை எடுத்துத் தந்த தொண்டமனாறு நண்பர்கள், விசாரணைகளை நெறிப்படுத்த உதவிய தொண்டமனாறு தெற்கு கிராம அலுவலர் பிரேமச்சந்திரன், விசாரணைகள் துரிதமாக நடக்க உதவிய வல்வெட்டித்துறை பொலீஸ் நிலைய உத்தியோகத்தர்கள், மரண விசாரணையைத் துரிதமாக நிறைவேற்றிய மரணவிசாரணை அதிகாரி திரு. குமாரசாமி, பூதவுடலை உடன் வழங்கி உதவிய வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி உட்பட சிற்றூழியர்கள், வெளிமாவட்டங்களுக்குத் தகவல் அனுப்பிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலி மற்றும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு பாண்ட் வாத்தியம் இசைத்து, மலர்மாலைகள், மலர் வளையங்கள் சாத்திய வயாவிளான் மத்திய மகாவித்தியாலயச் சமூகத்தினர் (அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்), இரங்கலுரை நிகழ்த்திய அதிபர் ஆ.சி.நடராஜா, குட்டியப்புலம் வித்தியாலய ஆசிரியர் மனோகரன், வளர்பிறை சனசமூக நிலையத் தலைவர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட ஊரெழு ஞானவயிரவர் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோருக்கும் -

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றி எமக்குப் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் மற்றும் அனுதாபந் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் இருகரங்கூப்பி எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஊரெழு கிழக்கு, ஊரெழு.* (89079) - **குடும்பத்தினர்.**

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கிளையில் பணிபுரியும்
திரு.சி.சுபசீலன்அவர்களின அன்புத் தாயாரும்
திருமதி கலாவாணி குணசீலன அவர்களின்
அன்பு மாமியாருமான

## திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
*மக்கள் வங்கி (பிரதான கிளை)*
*பருத்தித்துறை, நெல்லியடி.*

(89093)

---

*தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின்*

# 35ஆவது ஆண்டு விழாவும் 'பெரியோர்களைக் கௌரவித்தலும்

**16.06.2001**

இன்று தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 35ஆவது ஆண்டு விழாவைப் போற்றுகின்றோம்; வாழ்த்துகின்றோம். இவ்விழாவில் சைவசமயப் பண்பாட்டுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களைக் கௌரவித்தல் நிகழ்வில் **பண்டிதமணி திரு. கணபதிப் பிள்ளை** அவர்களின் மாணவனும், **கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களின் ஆளுமையிலும் சைவசமயப் பண்பாடுகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் மட்டுவில் **சைவத்திரு காசிநாதர் சிவபாலன்** அவர்களின் பணி மேன்மேலும் வளர்ச்சியுற்று சைவத்திற்கும், தமிழுக்கும், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும், இந்து இளைஞர் சங்கத்திற்கும், நாட்டுக்கும் நன்மையே கிடைக்க வேண்டுமென வாழ்த்துவதோடு -

மற்றும் இன்று கௌரவிக்கப்படும் சைவப் பெரியோர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.**

## புதிய நதியா நகை மாடம்

103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P. 3261**

(89092)

---



உ

அராலி - ஆவரம்பிட்டி
அருள்மிகு

## ஸ்ரீமுத்துமாரி அம்பாள்ஆலய

வருடாந்த நவோத்திர சகஸ்ர

## மகா சங்காபிஷேகப் பெருவிழா

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் விஷு வருடம் ஆனித் திங்கள் 4ஆம் நாள் (18.06.2001) திங்கட்கிழமை அம்பிகைக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. நாளை (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 2-00 மணியளவில் விக்னேஸ்வர பூசையுடன் கிரியைகள் ஆரம்பமாகும். 18.06.2001 திங்கட் கிழமை காலை 8-00 மணிக்கு சங்கு பூஜையுடன் ஆரம்பமாகி அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

## இரவு நிகழ்ச்சிகள்

பிரத்தியேகமாக அமைக்கப்பெற்ற மேடையில்

★ "சைவசமயப் பண்பாடுகள்" பற்றி
வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட இந்து சமய விவகாரப் பொறுப்பாளரும்
வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான
**திரு.ந.திரிலோகநாதன்**
சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

★ ஈழத்து அனைத்து நாதஸ்வர, தவில் வித்துவான்களின் ஆதரவில் இன்னிசை கானமழை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

★ ஈழ நல்லூர் "அருணா இசைக்குழுவின" இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விஷேசமாக
அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் அம்பாள்
வீதியுலா வரும் கண் கொள்ளாக்காட்சியும் இடம்பெறும்.

(89095) *~ சங்காபிஷேகக் குழுவினர்.*

---

# ஓராண்டு நினைவலைகள்



| மண்ணுலகு | விண்ணுலகு |
|---|---|
| 15 - 04 - 1937 | 16 - 06 - 2000 |

## அமரர் இளையவன் வையித்தி

பாசத்தோடு எம்மைக் காத்த
அன்புத் தெய்வமே! நீங்கள்
ஒளியோடு சேர்ந்த ஓராண்டில்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

நிரந்தர முகவரி:
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
தற்காலிக முகவரி:
*பொலிகண்டி,*
*பருத்தித்துறை.*

உயிருள்ளவரை உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

(89076)

# திருத்தம்

நேற்றைய உதயன் 15-06-2001ஆம் திகதிய இதழின் 10ஆம் பக்கத்தில் வெளிவந்த - மானிப்பாய், வலி.தெற்குப் பிரதேச சபையின் "காணி கொள்வனவு" விளம்பரத்தில் -
யாழ்.வீதி என்பதற்குப் பதிலாக மானிப்பாய் அட்டகிரி வீதி எனவும் - காணி உரிமையாளரது பெயர்
**திரு.தர்மலிங்கம் உதயகுமார்** என்பதற்குப் பதிலாக
**திரு.வீ.மகேசன்** எனவும் -
தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. ஆகவே, அவற்றைத் திருத்தி வாசிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**வெ.அ.ஜோன்சன் J.P.U.M.**
*தலைவர்,*
*பிரதேச சபை, மானிப்பாய்.*

(C/17110)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் சக பணியாளர்
**அன்ரன் விமலதாசன்** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி
## லூக்கேஸ்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(சொர்னம்மா)

அவர்களின் மரணச் செய்தி கேட்டுக் கவலை அடைகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**
*யாழ்ப்பாணம்.* (89097) ***யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.***

# கண்ணீர் அஞ்சலி

**எமது சக உத்தியோகத்தர்**
**செல்வி இ.தர்சினியின் அன்புத் தந்தையார்**

## வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*வடமராட்சி தெற்கு, மேற்கு*
*பிரதேச சபை,*
*கரவெட்டி.* (C/17112)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை சின்னத்தங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னதுரை சின்னத்தங்கம் நேற்று வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னத்துரையின் அன்பு மனைவியும் சறோஜா, சாந்தி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஈஸ்வரதாசன் (காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளரும், பருத்தித்துறை), பாலகுமார்(ஆஸ்திரேலியா), ஆகியோரின் மாமியும் ரேவதி (வயம்ப பல்கலைக்கழகம்), மயூரன்(வயம்ப பல்கலைக்கழகம்), கலைமதி (யாழ்.பல்கலைக்கழ விஞ்ஞான பீடம்), வானதி (வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரம் 2001), திலோத்தமி (ஆஸ்திரேலியா), டர்மி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.06.2001) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் 52/2, வைமன் வீதி, நல்லூரில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*52/2 ,வைமன் வீதி,*
*நல்லூர்* (89113)
பொ.ஈஸ்வரதாசன்
(மருமகன்)

## வயித்திலிங்கம் குமாரசிங்கம்

(இளைப்பாறிய பொலீஸ் பரிசோதகர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கோவில்குளம் வீதி, வவுனியாவில் வசித்தவருமாகிய வயித்திலிங்கம் குமாரசிங்கம் 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் (சின்னத்தங்கச்சி) அன்புக் கணவரும் அருந்தவநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்), இரவீந்திரநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்), அருட்செல்வி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜவதனி, வாசுகி, நந்தகுமார் ஆகியோரின் மாமனாரும் அநோசன், நிருசன், யாதுசன், கீர்த்தனன், பிரியங்கா, சகீன், யதர்சின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-06-2001 புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (89107)
கு.அருந்தவநாதன்
(மகன் - கூட்டுறவுப் பரிசோதகர்)

## ஆண்டு விழா

நவாலி,ஜூன்16

ஆனைக்கோட்டை, 3ஆம் கட்டை உதயதாரகை சனசமூக நிலையத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நிலையத் தலைவர் தலைமையில் நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன், வலி.தென்மேற்கு பிரதேச சபைத்தலைவர் அன்ரன் ஜோன்சன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வையொட்டி அன்று காலை 6.00மணி முதல் மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன இடம்பெறும்.

(100)


**புலமைப் பரிசில் - 2001**

*பரீட்சை 38 இல்*
*பரிசுக்குரிய மாணவர்கள்*

- ந.திருத்தணிகன் - 178
- ம.அழகரசன் - 172
- அ.சாயினி - 167
- ற.வைஷ்ணவி - 167
- ந.வேணுசரன் - 165
- ஆ.ஜதிகானந்த் - 164

அடுத்த பரீட்சை - நாளை (ஞாயிறு)

(89117)

*தரம் 1 முதல் O/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.*

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**பரீட்சை வினாத்தாள்**

தரம் 1 முதல் O/L வரை சகல பாடங்களுக்கான வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(89116)

**BRIGHTMAN**
கல்விநிலையம்
பிறவுண் வீதி, யாழ்.நகர்
*A/L 2003*
வெப்ப இரசாயனம்
*BY:- அன்பு*
*ஆரம்பம்:-*
18/06/2001 MON 4.30p.m
*(தனி ஒருபாட அனுமதி வழங்கப்படும்)*
(89105)

**லஷ்மி**
இணுவில்
கடைசி வாரமாக
*சரத்குமார், தேவயானி, ஆனந்தராஜ்*
நடிப்பில்
***பாட்டாளி***
(ரீல்ஸ்)
தினசரி : 10.30, 2.30 (பழையநேரம்)
அடுத்த புதிய S.T.R. பிலிம்ஸ் வெளியீடு
**கள்ளழகர்**
(89118)

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரபுதேவா, சரத்குமார், ஜெயாசீல், ஐஸ்வர்யா, கபாலி, விவேக் மற்றும் பலர் நடித்த
**பெண்ணின் மனதைத் தொட்டு**
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
20.06.2001 முதல்
**சிட்டிசன்**
(C/17000)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
**வானவில்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(89109)


# கிழக்கில் பிஸ்ரல் குழு கைவரிசை

கொழும்பு,ஜூன்16

ஏறாவூரில் நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஏறாவூர் பொலீஸ் நிலையத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கான்ஸ்டபிளே கொல்லப்பட்டார்.

கடந்த ஒரு மாத காலத்தில் கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவின் தாக்குதலுக்கு இலக்கான எட்டாவது நபர் இவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ)

# மரண அறிவித்தல்கள்

## சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் கிறிஸோலோகஸ்

சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் கிறிஸோலோகஸ் அவர்கள் நேற்று (15-06-2001) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவர் பொன்மலரின்(இளைப்பாறிய ஆசிரியர், றோ.க.த.க.பாட சாலை, உயரப்புலம், ஆனைக்கோட்டை) அன்புக் கணவரும், வினோதானந்தன்(பிரதேச செயலகம், நல்லூர்), மனோகரன்(வர்த்தகர், சுண்டுக்குளி), ஜெனநாதன்(தேசியசேமிப்பு வங்கி, சாவகச்சேரி), நவீனன், யஸ்மின் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னராணி, அருந்தவராணி, மனோநிதி (நவீல்ட் பாடசாலை), ராஜன்(தேவ ஊழியர் - ஜெபவீடு) ஆகியோரின் மாமனாரும், ஆளின், நிரேஷ், ருக்ஷன், ருக்ஷிக்கா, குளோரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16-06-2001) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*இல.35/1, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி.* (89102)
மனைவி, .
பிள்ளைகள்.

## சண்முகம் கனகசேகரம்

(சங்கானை முத்துக்கிருஷ்ணர்)
(இளைப்பாறிய மின்முகாரி, இலங்கை மின்சாரசபை)

கோப்பாய் நாவலடி (நாவலர் பாடசாலை ஒழுங்கை)யைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கனகசேகரம் 12-06-2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் பரமநாயகம் ஆகியோரின் அன்பு மகனும், உருக்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் சுப்பிரமணியம் J.P. (கோப்பாய், சட்டத்தரணி), சண்முகம் துரைசிங்கம் (கணக்காளர், ஆயுள்வேத திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சதானந்தன் (கனடா), சிவதாசன் (சிவம் பிரான்ஸ்), விமலசேகரம் (நவம் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகேஸ்வரி, தேவராஜேந்திரராணி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தி, ஜெயக்குமார், ரமணன், ஸ்ரீதாரணி, சிவராமன், கஜன், கிரிஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், வினோஷா, தர்சினி ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-06-2001) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*சங்கானை கிழக்கு,*
*சங்கானை* (89099)
க.சிவதாசன் (சிவம்)
(மகன்)

## சங்கரப்பிள்ளை ஆனந்தசுந்தரம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஆனந்தசுந்தரம் 14.06.2001 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கீதாலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் - திருமதி மயில்வாகனம் கண்மணி ஆகியோரின் அன்பு மருமகனும், தில்லைவாசன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் காமினி (பிரான்ஸ்), சசிகரன் (பிரான்ஸ்), கிரிதரன் (யா/நல்லூர், ஸ்தான சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவரட்ணம் (ஜேர்மனி), தேவகி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், ஜீவிதன், லாவணியா, சிந்துஜா, யஷ்மினியா, நிசாந்தினி, நிரோஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2001) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இலக்கம் 21, மலர்மகள் வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.21, மலர்மகள் வீதி,*
*அரியாலை.* (89091)
கீதாலட்சுமி (மனைவி),
கிரிதரன் (மகன்)

## முருகேசு செல்லத்துரை

(முன்னாள் பிரபல வியாபாரி)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தம்பசிட்டி புலோலி வடமேற்கு, பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லத்துரை (முன்னாள் பிரபல வியாபாரி) நேற்று (15.06.2001) வெள்ளிக்கிழமை காலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், வரலட்சுமி, குணவதி (லண்டன்), திவ்வியநாதன் (பிரான்ஸ்), கலாவதி (பிரான்ஸ்), இந்திநாதன் (பிரான்ஸ்), தனலட்சுமி (லண்டன்), செந்தில்நாதன் (பிரான்ஸ்), புஷ்பவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தவராசா (நிருசன் லொறி உரிமையாளர்), குகனேசன் (லண்டன்), வடிவேலு (பிரான்ஸ்), ரஞ்சினி (பிரான்ஸ்), கிரிதரன் (லண்டன்), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், நிருசன், நிரோசி, நிவர்சன் (மூவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிலோசன், நிமலன், அனோசன், ஆர்த்திகா, அருணன், சோபிகா, துர்க்கா, சோபனா, அர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.06.2001) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
*தம்பசிட்டி,*
*பருத்தித்துறை.* (89106)
இராசம்மா (மனைவி)
தவராசா (மருமகன்)

# சமாதானப் பேச்சுக்கான கதவு எந்த நேரமும் திறந்திருக்காது!

## எச்சரிக்கின்றார் பிரதமர்

கொழும்பு,ஜூன்16

தற்போது திறக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கான கதவுகள் எந்த நாளும் திறந்திருக்கப்போவதில்லை.

- இவ்வாறு விடுதலைப் புலிகளை எச்சரித்திருக்கின்றார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

இளைஞர் விவகார அமைச்சுக்கான புதிய கட்டடம் ஒன்று நேற்று கொழும்பில் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

"பேச்சுக்கான கதவுகள் இன்னமும் திறந்தே இருக்கின்றன. ஆனால் அது எந்தக்காலத்திலும் திறந்திருக்கப்போவதில்லை.

"சமாதானப் பேச்சுக்களில் இணைந்துகொள்ள விடுதலைப் புலிகளுக்கு இன்னமும் அவகாசம் இருக்கிறது. இதற்காக அரசாங்கம் சம்பந்தப்பட்ட தரப்பிடம் இருந்து பதிலை எதிர்பார்த்து நிற்கிறது.

"இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகத தற்போது உருவாகியுள்ள அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அனைவரும் முன்வர வேண்டும். இதற்கென அனைவரிடமும் அரசாங்கத்தின் சார்பில் ஒத்துழைப்புக் கோருகின்றேன்."

- என்றும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார். (உ-7-9)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள நிலைமையை நேரில் ஆராய்ந்தார்.

பண்டாரவளை முகாமைச் சுற்றியுள்ள பிரதேச மக்களின் வாக்குமூலங்களை அவர் பண்டாரவளை நதிமன்றத்தில் வைத்து இன்று பதிவு செய்யவிருக்கின்றார்.

இந்த முகாம் தாக்கப்பட்ட சமயம் காயமடைந்து உயிர்தப்பிய எட்டுத் தமிழ் இளைஞர்களின் வாக்குமூலங்களையும் அவர் பெறவுள்ளார்.

தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் உள்ள இந்த எண்மரும் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து அவர்களிடம் வாக்குமூலம் பெறப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3-7)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பேதும் ஏற்படவில்லை என்றும்-

அதன்பின்னர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் வெடிபொருள்களையும் ஆயுத தளபாடங்களையும் மீட்டனர் என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

## இளைஞன் கைது

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த புதன்கிழமை வடமராட்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குமாரவேல் சுதாகரன் (வயது 19) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.கிளை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

எனினும் குண்டு காவலரணையும் வீதியையும் தாண்டி வெளியில் வீழ்ந்து வெடித்தது. காவலரணுக்கோ ஆள்களுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை.

நேற்று வெள்ளிக்கிழமை அருகிலுள்ள காளிகோயிலுக்கு வந்த பெருமளவிலான பக்தர்கள் இந்தச் சம்பவத்தை அடுத்து அல்லோல கல்லோலப்பட்டு சிதறி ஓடினர்.

சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த மேலதிக பொலீஸார் அப் பகுதிகளில் தேடுதல்களை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

கடற்படைத்தள வீதியில் அரை மணி நேரம் போக்குவரத்துத் தடைப் பட்டது. (உ-3-145)


பருத்தி நகரின் மையத்தில்

OXFORD
ENGLISH ACADEMY

(புதிய கிளை நிறுவனம்)
பத்திரகாளி அம்மன் கோயில் வீதி,
பருத்தித்துறை.

பின்வரும் வகுப்புகள்
ஆரம்பம்:- 25.06.2001

★ வேலை செய்வோருக்கான Spoken English and Written English மாலை சனி, ஞாயிறு வகுப்புகள.

★ 2003ஆம் ஆண்டு A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான General ENGLISH காலை, மாலை நேரவகுப்புகள்.

★ புதிய A/L ஆங்கில மொழிமூலமான கல்வியைத் தொடரும் வகையில் 10,11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான Spoken and Written English வகுப்புகள்.

★ இவ்வருடம் O/L பரீட்சையில் ஆங்கிலத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான (பழைய பாடத்திட்டம்) பயிற்சி வகுப்புகள்.

BY: MR.B.JOTHY

(அனுமதிகளையும் நேர அட்டவணையையும் அலுவலகத்தில் முற்கூட்டியே பெறவும்) (88945)



கணக்கீடு
A/L 2002
ஒப்படைக்கணக்கு
ஆரம்பம்: இன்று 3.00 p.m.
S.தவா
B.COM.(HONS) (ACC.-SPI.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA.
(89114)



PAPER ClASS
G.C.E O/L 2001
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்
ஆசிரியர்:
E.J.KANTHAUBAN
சமூகக்கல்வியும் வரலாறும
ஆசிரியர்:
K.SUTHAKARAN
ஆரம்பம்: 21-06-2001 (4p.m.)
அனுமதிகள் (25)
மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
O/L DAY CLASS
வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஸைற் கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(89101)



தமிழ் - A/L 2001 ஒகஸ்ட்
மாதிரிப் பரீட்சைகள்

2001-06-18 (திங்கள்) - பகுதி I
2001-06-20 (புதன்) - பகுதி II
} முதலாவது பரீட்சை

2001-07-05 (வியாழன்) - பகுதி I
2001-07-09 (திங்கள்) - பகுதி II
} இரண்டாவது பரீட்சை

குறிப்பு : வெளிமாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்.
இடம் : ஆசிரியர் கற்பிக்கும் கல்வி நிலையங்களில்
ஆசிரியர்: பண்டிதர் - மாவை V.M.லிங்கம் B.A.(Hons)
(89080)


## பத்திரிகையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்16

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கொட்டடியில் சங்கத்தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப செயலாளரும, கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவருமான இரா.துரைரத்தினம் "தமிழ் ஊடகவியலாளரும் நாமும்" என்றதலைப்பில் இக்கலந்துரையாடலின் போது கருத்துரை வழங்குவார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அங்கத்தவர்களை சங்கம் கேட்டுள்ளது. (உ-173)

## அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் இளைஞர் கைது

வவுனியா,ஜூன்16

சிகிச்சைக்கென அனுராதபுரம் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வன்னிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த புதனன்று அனுராதபுரம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தர்மரட்ணம் அன்பழகன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கண், கால் ஆகியவற்றில் ஏற்பட்ட காயங்களுடன் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா வந்த இந்த இளைஞர் சிகிச்சைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றப் பட்டிருந்தார்.

கைதான இந்த இளைஞன் பொலீஸாரால் தீவிரமாக விசாரிக் கப்பட்டு வருகிறார். (உ-7)

## டாக்டர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கு டாக்டர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு நேற்று கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடக்குக் கிழக்குக் கிளைகளைச் சேர்ந்த 12 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சுகாதார அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராஜா, வி.கே.குகேந்திரன் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு டாக்டர்களின் பிரச்சினைகளைத தீர்ப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கிடைத்த தகவல்கள் வருமாறு:-

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் வெளிப்பிரதேச டாக்டர்களுக்கு மட்டும் வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவு சம்பந்தமான திட்டம் இந்த வருட இறுதியுடன் கைவிடப்படும்.

★ இந்த வருடம் முதல் ஆறுமாத காலத்தில் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறாத ஏனைய டாக்டர்களுக்கு இந்தக் கொடுப்பனவு அடுத்த ஆறுமாதங்களுக்கு வழங்கப்படும்.

★ வடக்குக் கிழக்கில் பணியாற்றும் வெளிமாவட்ட டாக்டர்களுக்கு விசேட மேலதிகக் கொடுப்பனவை வழங்கும திட்டம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வற்புறுத்தலின் பேரிலேயே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாக சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். இத்திட்டத்தை நீக்குவதை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்க்காமல் இருப்பதை அச்சங்கத்தின் வடக்குக் கிழக்கு கிளைச்சங்கங்கள் உறுதிப் படுத்த வேண்டும்.

★ அடுத்த ஒரு மாதத்துக்குள் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட வேண்டும்.

★ வடக்குக் கிழக்குப் போன்ற பகுதிகளில் போதிய டாக்டர்கள் பணிபுரிவதை உறுதிப்படுத்துவதற்காக அப்பிரதேசத்தைச் சேர்ந்த டாக்டர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அங்கு பணிபுரிய வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்துவது போன்று ஏதேனும் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப் படுத்துவது குறித்து ஆராய்ந்து முடிவு செய்தல். (உ-3-5-7-15-139)

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி என்ற வகையிலோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி என்ற வகையிலோ இதுபற்றி நான் அறுதியாக எதனையும் கூறமுடியாது. - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை -

கொழும்பில் நடைபெற்ற மற்றொரு பொதுவைபவம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி -

அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது அவற்றைத் தான் நேரடியாகக் கண்காணிக்கப் போவதாகவும் -

அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படும் போது அவை தொடர்பாக உரியவர்கள் சாட்டுப் போக்குத் தெரிவிக்கக் கூடாது என்றும் - சகல அமைச்சர்களுக்கும் இது குறித்து அறிவித்திருப்பதாகவும் - தெரிவித்தார். (உ-7-9)

## கசப்புணர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனையை தனி மாவட்டமாக அறிவிப்பதில் தனக்கு இருக்கும் சிக்கல்களை ஹக்கீமுக்கு ஜனாதிபதி எடுத்துரைத்ததாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து-

கல்முனை நகரசபையை மாநகர சபையாகத் தரமுயர்த்தும் அறிவிப்பை அரசு விடுத்தது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலும் நேற்று விடுக்கப்பட்டது.

அடுத்த வருடம் ஏப்ரல் முதல் இந்த மாநகரசபை இயங்க ஆரம்பிக்கும்

"கல்முனையைத் தனி மாவட்டமாக்க வேண்டுமென்று எமதுகட்சி கோரி வரும் நேரத்தில் கல்முனை நகரசபையை மாநகரசபையாகத் தரமுயர்த்த அரசு முடிவு செய்துள்ளது ஓர் ஏமாற்று நடவடிக்கையாகும். எமது கோரிக்கையை மழுங்கடிப்பதற்காகவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது" என்று முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

நேற்று இடம்பெறவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடத்தின் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்குவது என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவிருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(உ-3)

## பொலன்னறுவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிச் சென்றதாகவும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இந்த மோதலில் இரண்டு புலிகள் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் எனவும் அது குறிப்பிட்டது. இந்த மோதலின் போது உயிரிழந்த மற்றும் காயமடைந்த படையினரின் ஆயுதங்களைப் புலிகள் எடுத்துச் சென்றனர் என்றும்-

அந்தப் பகுதியில் வீடு ஒன்றின் மீது ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கூட்டுப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜானக பெரேரா அந்தப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக இவரை நியமனம் செய்த ஜனாதிபதி பின்னர் அப் பதவியை ஏற்பதைத் தாமதிக்கும்படி அவருக்குத் தகவல் அனுப்பியதாகச் செய்திகள் வெளியாகியிருப்பது தெரிந்ததே.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை தளகர்த்தர் பதவிக்கு நியமிக்கும்படி பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உட்பட பல அமைச்சர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகக் கூறப்பட்டது. (உ-3)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியான பேரியல் அஷ்ரப் மூலம் தமது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த அரசு முனைந்துள்ளது என்றும் -

அதன் வெளிப்பாடே இந்த ஆர்ப்பாட்டம் என்றும் -

அரசின் ஆதரவுடன் அமைச்சர் பேரியல் அஷ்ரப்தான் இந்த ஆர்ப்பட்டத்துக்கு மூல காரணமானவர் என்றும் - முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் பேரியல் அஷ்ரப்புக்கோ, ஹிஸ்புல்லாவுக்கோ கட்சியின் அரசியல் உயர் பீடத்தில் இடம் வழங்கப்படமாட்டாது என்றும் -

கட்சியில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஹிஸ்புல்லாவுக்கு பதவி வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் - அவர் மேலும் சொன்னார். (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

உசனைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி (14-06-2001) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், கல்வித் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், குணசீலன் (தாவரவியல் ஆசிரியர்), சுபசீலன் (மக்கள் வங்கி, நெல்லியடி), திருமதி வாமதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வாமதேவன் (லண்டன்), திருமதி கு.கலாவாணி (மக்கள் வங்கி, நெல்லியடி), திருமதி.சு.சொரூபா (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-06-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றன. பத்திரிகை அறிவித்தலின்படி அறிவிக்காது பூதவுடல் தகனம் செய்யப்பட்டமைக்காக மிக மனம் வருந்துகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்னேஸ்வரா வீதி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

(89081)

தகவல்
சி.குணசீலன் - சி.சுபசீலன்
(பிள்ளைகள்)

### கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம்

(முன்னாள் போமன் - காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத்தாபனம், லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளையின் முன்னாள் செயலாளர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் நேற்று 15-06-2001 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நிகேதனன் மற்றும் திருமதி சாந்தினி நாகராஜா (ஆசிரியை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), செல்வி வை.குமுதினி (சமுர்த்தி முகாமையாளர், மாவட்டச் செயலகம் -யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வ.நாகராஜாவின் (எக்ஸ் கதிராளர் -ஓமான்) அன்பு மாமனாரும் நா.ஆதிசனனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-06-2001) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பனை,*
*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.*

(C/17121)

தகவல்:
வ.நாகராஜா
(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 .06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.